Registered as a Newspaper பக்கங்கள்: 12 விலை ரூபா 6·00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஆனி 31 | 15-07-94 | வெள்ளிக்கிழமை | ஓசை 147

## வால்நட்சத்திரம்-வியாழன் மோதலை பார்க்கலாம்

ஷூ மேக்கர்- லெவி-9 என்ற வால் நட்சத்திரம் வியாழன்மீது மோத ஆரம்பிக்கும் நிகழ்வு நாளை ஆரம்பிக்கவுள்ளது என வானியலாளர் தெரிவிக்கின்றனர். இம்மோதலை இலங்கையில் எதிர்வரும் 17ம், 20ம், 21ம் திகதிகளில் வெற்றுக்கண்ணால் காணலாம் என அறிவிக்கப்படுகிறது. இரவு 8.34 மணிக்கும் 8.37 க்கும் இடையில் உச்சிவானத்திலிருந்து சுமார் 20 பாகை மேற்கே அதனைக் காணலாம் எனகொழும்புப் பல்கலைக் (12-ம் பக். பார்க்க)

## வன்முறைகள் அதிகரிப்பு

(கொழும்பு )

தேர்தல் வன்முறைகள் தொடர்ந்து அதிகரித்து வருவதாக பொலிஸ் தலைமை அலுவலக பேச்சாளர் 'லங்காதீப' பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அதிகாலை வரை நூற்று முப்பத்தி நான்கு சம்பவங்கள் நடைபெற்றதாகவும் மாலை வேளைகளிலே வன்செயல்கள் அதிக அளவில் நடைபெறுவதாகவும் அவர் தெரிவித்தார்.

## யாழ். மாவட்டத் தேர்தல்

# கூட்டணியின் ஆட்சேபம் நீதிமன்றத்தால் நிராகரிப்பு

(கொழும்பு)

யாழ். தேர்தல் மாவட்டத்தில் தேர்தல் நடத்துவதற்கு எதிராக தமிழர் விடுதலைக் கூட்டணி சமர்ப்பித்த ஆட்சேப மனுவை மேல்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்தது. தேர்தல் செயற்பாடுகளை ஆரம்பித்த பின்னர் தேர்தல் ஆணையாளர் அதனை நிறுத்த முடியாது என மேல்நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணி, மேன் முறையீட்டு நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்த தன் மனுவில், யாழ்ப்பாணத்தில் சுதந்திரமாக தேர்தல் நடக்க வாய்ப்பில்லை. எண்பது சத வீத மக்கள் இராணுவக் கட்டுப்பாட்டிலில்லாத பகுதிகளிலேயே வசிக்கின்றனர். எனவே யாழ்ப்பாணத்தில் தேர்தலை இடைநிறுத்துமாறு தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிட நீதிமன்றைக் கோரியிருந்தது.

இம் மனு தொடர்பாக, ஆராய்ந்த மேன் முறையீட்டு நீதிமன்றம், தேர்தல் செயற்பாடுகளை ஆரம்பித்த பின்னர் தேர்தல் ஆணையாளர் அதனை நிறுத்த முடியாது என நேற்று தீர்ப்பளித்துள்ளார்

மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் இம்முடிவை அடுத்து, உச்ச நீதிமன்றத்துக்கு இப்பிரச்சினையை கொண்டு செல்ல கூட்டணி தீர்மானித்திருப்பதாகவும் தெரிய வருகின்றது

# கொழும்பில் புலிகளின் தற்கொலைப் படையினர்

## தேர்தல்காலத்தில் தாக்கத் திட்டமாம்

(கொழும்பு)

கொழும்பு நகரில் தேர்தல் சூழ்நிலைகளைப் பயன்படுத்தி பத்துப்பேர் கொண்ட விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையொன்று தாக்குதல் நடாத்த இருப்பதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதென சிறிலங்கா புலனாய்வுத் துறையினர் கூறியுள்ளனர்.

தேர்தல் பணிகளில் பாதுகாப்பு படையினர் ஈடுபட்டிருக்கும் சமயங்களில் புலிகள் தாக்குதல் நடாத்தி இடையூறு விளைவிக்க முயல்வார்

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள்மீதான நடவடிக்கை; மாற்றம் எதுவும் இராது

### பௌத்த பீடாதிபதிக்கு ஜனாதிபதி உறுதி

(கொழும்பு)

புலிகள் இயக்கத்தின் போர்ப் பலத்தைக் குறைப்பதற்காக இதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் எவ்வித மாற்றமும் இருக்காது என ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தெரிவித்துள்ளார்

வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு ஐக்கிய தேசியக் கட்சி முன் வைக்கும் தீர்வு பற்றி பௌத்த பீடாதிபதி எழுதிய கடிதத்துக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

தனது பதில் கடிதத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு - கிழக்கு ஆகிய இரண்டு மாகாணங்களை

(12ஆம் பக்கம் பார்க்க)

## விமானப்படையில் புதிய தாக்குதற் பிரிவு

(கொழும்பு)

சிறிலங்காப் படையினர் புதிதாக நிறுவியுள்ள விமான தாக்குதற் பிரிவு மன்னார் மாவட்டத்திலுள்ள சிலாவத்துறையில் விடுதலைப் புலிகளின் இருப்பிடங்கள் மீது முதலாவது தாக்குதலை மேற்கொண்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இராணுவத்தினர் இவ் விமானப்படையணியினரின் உதவியுடன் கடற்புலிகளின் தளம் ஒன்றை நிர்மூலமாக்கியதாக அவ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## றை ஸ்ரார் விமான தகர்ப்பு தேடப்பட்டவர் கைது

(கொழும்பு)

''றை ஸ்ரார்'' விமானக் குண்டு வெடிப்பில் தேடப்பட்ட ஒருவர் நேற்று முன் தினம் இரவு கொட்டாஞ்சேனை பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக சிறிலங்கா இரகசிய புலனாய்வுத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

நெடுந்தீவை சேர்ந்த தர்மலிங்கம் என்ற தமிழர் அவரது ஆமர் வீதி வீட்டில் வைத்து புலனாய்வுத் துறையினரும் கொட்டாஞ்சேனை பொலிஸாரும் இணைந்து நடத்திய சுற்றிவளைப்பில் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனத்தெரிவிக்கப்படுகிறது.

## குறுக்கு வழியில் கூட்டணி லாபம் தேட முனைகிறது

### பி, பி. ஸி செய்தியாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாளாந்தம் ஜீவ மரண போராட்டம் நடத்திக் கொண்டு இருக்கும் வடக்கு கிழக்கு மக்களின் நிரந்தர விடிவுக்கான ஓர் உறுதியான அரசியல் உடன்பாடு ஒன்றை எட்டி அர்த்தமுள்ள பாராளுமன்ற பிரவேசத்தை விடுத்து குறுகிய அரசியல் கண்ணோட்டத்துடன் தமிழர் விடுதலைக் கூட்டணி தேர்தலுக்கு தயாராவதாக பி. பி. ஸி. தமிழ் சேவையின் கொழும்புச் செய்தியாளர் பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இவ்வாறு குறுகிய நோக்கை அடிப்படையாகக் கொண்டு பாராளுமன்ற ஆசனத்தை கைப்பற்றும் அரசியல் கட்சிகளின் நடவடிக்கை வேதனைக்கு உரியது என்றும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் வன்செயலில் ஐ. தே. க.வினர் இருவர் பலி

(கொழும்பு)

தேர்தல் வன்செயல்களில் பொலனறுவையில் இரு ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களே உயிரிழந்துள்ளதாக தெரிய வருகிறது.

கடந்த திங்கட்கிழமை நடந்த இச்சம்பவத்தில் ஜெயந்திபுர ஐ.தே.க. மகளிர் அணித் தலைவியான குசுமலதா(40), சுதுகந்த பிரதேச ஐ. தே. க. தலைவர் லொக்குபண்டா (54) என்பவர்களே உயிரிழந்தவர்களாவர்.

மேலும் ஐ. தே. க. ஆதரவாளர்களும் எதிரணியினரால் தாக்கப்பட்டு பொலனறுவை பக்முன வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை வன்முறைக்கு இலக்காகி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்த பொது ஜன ஐக்கிய முன்னணியின் மேலும் ஓர் ஆதரவாளர் மருத்துவ மனையில் மரணமடைந்துள்ளார்.

இதேவேளை மேலும் பதினைந்து பேரின் நிலைமை கவலைக்கு இடமான நிலையை அடைந்து வருவதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## தேர்தல் வன்முறைகள் திட்டமிட்டு நடத்தப்பட்டவை

### டி. பி. விஜேதுங்கா தெரிவிப்பு

(கொழும்பு)

வேட்பு மனுக்கள் தாக்கல் செய்த இறுதித் தினமான கடந்த திங்கட்கிழமை நடந்த வன்முறைகள் பல இடங்களில் நடந்த வன்செயல்கள் முன் கூட்டியே திட்டமிட்டு ஓரிடத்திலிருந்து நெறிப்படுத்தப்பட்டு நடத்தப்பட்டதாக, ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா குறிப்பிட்டார்-

(12ஆம் பக்கம் பார்க்க)

## தீவுப்பகுதிக்கு பிரசாரத்துக்கு வந்த ஈ.பி.ஆர்.எல்.எவ் விற்கு உணவுவழங்க ஈபிடிபி தடை

(கொழும்பு)

தீவுப் பகுதிகளில் பிரசாரம் செய்ய வரும் ஈ பி.ஆர். எல்.எவ். இயக்கத்தினருக்கு தங்குமிட வசதிகளோ உணவோ வழங்கக் கூடாதென தீவுப் பகுதிகளில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## புனரமைப்பு செய்யப்பட்ட செயலக கட்டடம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா விமானப் படையினரின் குண்டு வீச்சினால் சேதமடைந்து புனரமைப்புச் செய்யப்பட்ட யாழ். செயலக மேல்மாடிக் கட்டடத் தொகுதி நேற்று சம்பிரதாய பூர்வமாக திறந்துவைக்கப்பட்டுள்ளது.

யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் இதனைத் திறந்து வைத்தார். இதனைத் தொடர்ந்து குண்டு வீச்சிற்கு முன்னர் யாழ். செயலக கட்டடத் தொகுதியின் மேல்மாடியில் இயங்கி வந்த அனைத்துப் பிரிவுகளும் முன்புபோல் அவ்விடத்திலேயே இயங்கும் என

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### மகாதேவா ஜோதிடம்

குறிப்பு கை,வீடு பார்த்தல் குறிப்பு எழுதுதல், அதிஷ்ட எண் மாற்றம் ஆகியவற்றிற்கு ஜோதிடரைத் தினசரி 140, செல்லர் வீதி, கள்ளியங்காட்டுச் சந்தைக்கருகாமையில் சந்திக்கலாம். (8814)

### தேவை

சிறு குடும்பமொன்றிற்கு தனியாகவோ,அனெக்ஸ் ஆகவோ வீடு ஒன்று தேவை. யாழ் மாநகர எல்லைக்குள் இருப்பது விரும்பத்தக்கது. க.கஜரூபன். 03, நல்லூர் குறுக்கு வீதி யாழ்ப்பாணம். (8818)

### குரு, வால் வெள்ளி மோதலும் குருசண்டாளயோகமும்

யூலை 16 முதல் 22 வரை ஜனிக்கும், கன்னி, விருச்சிக தனு, மீனலக்கினத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கும் தீராத வியாதிகளையும், அற்ப ஆயுளையும் கொடுக்கும். தாம்பத்திய உறவுகளைத் தவிர்த்தல் வேண்டும் நான்கு வருடங்களில் பூமியில் தாக்கங்களை உண்டாக்கும் சத்தியா கட்டுடை. ((8817)

### விசேட கூட்டம்

யாழ் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இன்று பி.ப. 2.30 மணிக்கு நடைபெறும் விசேட கூட்டத்திற்கு அனைத்து வர்த்தக ஊழியர்களும் தவறாது கலந்துகொள்ளுமாறு வர்த்தக ஊழியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. ஊழியர்களின் வரவு பதியப்படும் என சங்க பொதுச் செயலாளர் அறிவித்துள்ளார்.

## போட்டோ அல்பம் இனாம்

★ கலர் பிலிம் சுருள்களை கழுவி படமாக்கி 30 பிரதிகள் பெற்றால் ஒரு போட்டோ அல்பம் இனாம்

★ போட்டோ பிளேற்(PHOTO PLATE)கலர் படங்களை கோப்பைகளில் பதித்தல் (சாம்பிள் பார்வையிடலாம்)

★ கொம்யூட்டர் றபர்சீல் (COMPUTER RUBBER STAMPS) (இரண்டு வருட உத்தரவாதம்)

★ லயின்,காவ்ரோன்,கலர் புளொக்ஸ்(Line, Half Tone,Colour Blocks)

★ புகைப்பட பிரதியாக்கம் (RE-COPY) மேல் குறிப்பிட்டவற்றைக் குறைந்த செலவில் குறுகிய காலத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

## (-) கொழும்பு கலைக்கூடம் (-)

(கொழும்பு ஸ்ருடியோ)

**55, லெப். இளங்கோ வீதி, யாழ்ப்பாணம்.**

**தொழில்நுட்பத்தில் 35 வருடங்கள் அனுபவம் பெற்றவர்கள்**

(சி-9775)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## கேள்வி அறிவித்தல்

### தனியார் பாதுகாப்புச்சேவை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருதனாமடத்தில் அமைந்துள்ள இராமநாதன் நுண்கலைக்கழகத்திலும் கைதடியில் அமைந்துள்ள சித்த வைத்தியத் துறையிலும் பாதுகாப்புச் சேவையை மேற்கொள்வதற்கு பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்துள்ள தனியார் பாதுகாப்பு முகவர் அமைப்புக்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கோருகின்றது.

மீளளிக்கப்படாத வைப்புப்பணமான ரூபா 250/- ஐயும் மீளளிக்கப்படும் வைப்புப்பணமான ரூபா 2500/- ஐயும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரிடம் செலுத்தி அவரிடமிருந்து பெற்ற பற்றுச்சீட்டுக்களை உதவிப்பதிவாளர் / நிர்வாகக்கிளையில் சமர்ப்பித்து உரிய கேள்விப்படிவங்களையும், விபரப்பட்டியலையும் 18-07-94 திகதியிலிருந்து 03-08-94 திகதிவரை பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்படிவங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளருக்கு 12-08-94 திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்புதல் வேண்டும்.

மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள உதவிப்பதிவாளர் / நிர்வாகக் கிளையுடன் தொடர்பு கொள்ளவும்.

எந்தவொரு கேள்வியையும் நிராகரிக்கும் உரிமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கேள்விச்சபைக்கு உண்டு.

**பதிவாளர்,**
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.
13-07-94

(சி-9914)

## நினைவு கூருகின்றோம்...

## 15-07-1994...

1983-ம் ஆண்டு இதேதினத்தில் சாவகச்சேரி-மீசாலை பகுதியில் சிறிலங்காப்படையின் சுற்றிவளைப்பில் விழுப்புண்ணடைந்த நிலையில் சகதோழனால் சுடுவிக்கப்பட்டு வீரச்சாவெய்திய,

**லெப்.சீலன்-ஆசீர்** (ஞானப்பிரகாசம் லூக்காஸ் சாள்ஸ்அன்ரனி-புனிதமரியாள்வீதி, திருமலை)

**ஆனந்** (இராமநாதன் அருள்நாதன்-மயிலிட்டி-காங்கேசன்துறை)

1987-ம் ஆண்டு வீரச்சாவெய்திய,

★ **வேலுப்பிள்ளை சித்திரவேல்** (மட்டு)

1988-ம் ஆண்டு திருமலை-குச்சவெளிப் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த.

**2-ம் லெப்.ஞானி** (காளிமுத்து சிவராசா-திரியாய் -திருமலை)

மன்னார்-தள்ளாடி முகாமில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் கத்தியால் குத்திக் கொல்லப்பட்ட பரப்புக்கடந்தானைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

கிளி-பரந்தன் சந்தையில் இந்தியப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட மாணவி உட்பட 05 தமிழர்கள்.

1989-ம் ஆண்டு ஒட்டிசுட்டான் - கற்சிலைமடுப் பகுதியில் இந்தியப்படையினரின் வாகன தொண்டர் அணி மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**மேஜர் ஞானவேல்** (சிற்றம்பலம் தயானந்தராசா--வரணி, கொடிகாமம்-யாழ்)

மணலாறு-செம்மலைப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய,

**அசோக்** (கந்தையா அசோக்குமார்-செம்மலை-மணலாறு)

யாழ்-கல்வியங்காட்டில் இந்தியப்படையினருடனான சமரின்போது விழுப்புண்ணடைந்த நிலையில் தனது கைக்குண்டை வெடிக்கவைத்து வீரச்சாவெய்திய,

**இரகர்சிவா-சின்னநசிர்** (கார்த்திகேசு சிவபரன்-அம்பாள் வீதி, நாயன்மார்கட்டு-யாழ்)

யாழ்-திருநெல்வேலியில் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

★ **முருகன்** (சோமசுந்தரம் திருமுருகன் - புன்னாலைக்கட்டுவன்தெற்கு-யாழ்)

யாழ்-நல்லூரில் தேசவிரோதசக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான யாழ் செயலக ஊழியரான,

**செல்லத்துரை சச்சிதானந்தம்** (மட்டுவில் வடக்கு-சாவகச்சேரி)

1990-ம் ஆண்டு வீரச்சாவெய்திய,

**ஹனிபா** (அபுசாலி புகாரி-அக்கரைப்பற்று-அம்பாறை)

மாங்குளத்தில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த,

**சலீம்** (சிவனுப்பிள்ளை யோகநாதன்-விசுவமடு-முல்லைத்தீவு)

யாழ் - பழையபூங்காப் பகுதியில் சிறிலங்கா விமானப்படைக் குண்டுவீச்சில் வீரச்சாவெய்திய.

**லெப். அம்பி** (சித்தர் கனகரத்தினம் - அச்சுவேலி தெற்கு)

இதேதினம் சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டு எரிக்கப்பட்ட 3 தமிழர்கள்.

அம்பாறையில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மத்திய முகாம் 4-ம் குடியிருப்பைச் சேர்ந்த 02 தமிழர்கள்.

திருமலை - நிலாவெளி, கோபாலபுரம் இடம் பெயர்ந்தோர் முகாமில் வைத்து சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட பெண் உட்பட 07 தமிழர்கள்,

1991ஆம் ஆண்டு ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பு முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட ஆ.க.வெ நடவடிக்கையின் போது வெற்றிலைக்கேணியிலிருந்து கட்டைக்காட்டுக்கு முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய,

**கப்டன் முகுந்தன்** (தியாகராசா விக்கினேஸ்வரன் - வத்திராயன் வடக்கு, தாளையடி-யாழ்)

**லெப். சந்திரன்** (நாகராசா நவதாஸ் - அச்சுவேலி தெற்கு - யாழ்)

**நியூட்டன்** (கந்தையா தேவராசா - களபூமி, காரைநகர் - யாழ்)

**கரிகாலன்** (மாப்பாணர் உதயகுமார் - ஆவரங்கால், புத்தூர் கிழக்கு - யாழ்)

மணலாறு பகுதியில் எமது முகாமை நோக்கி வந்த சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய,

**2-ம் லெப் பாபு** (அரசரத்தினம் மனோகரன் - மாங்கேணி, வாழைச்சேனை - மட்டு)

**குசேலன்** (டேவிற் சுரேஸ் - மாமாங்கக் கொலனி - மட்டு)

**ஜெயசீலன்** (புஸ்பராசா அரியவிக்கினராசா- முறக்கொட்டாஞ்சேனை - மட்டு)

**கப்டன் மனோ** (கோணலிங்கம் சிறிதரன் - குச்சவெளி - திருமலை]

**லெப். குஞ்சன்** (இமானுவேல் சந்திரகுமார்-இருதயபுரம், மூதூர் - திருமலை)

**லெப். ஞானி** (தம்பிராசா சிவநாதன் - கொத்தி ஒழுங்கை - திருமலை)

**ராகவன்** (செல்லக்குட்டி பிரபாகரன் - மூதூர்-திருமலை)

**றிங்ஸ்** (மகாவிஷ்ணு திருமாலழகன் - குச்சவெளி-திருமலை)

**பிரமிளன்** (செபமாலை (கமிலன்) ரதீஸ்வரன்-சீனன்குடா - திருமலை)

**கப்டன் பசிலன்** (சந்திரசேகரம் விமலநாதன் - கொக்குத்தொடுவாய் - மணலாறு)

**நிகேதன்** (கந்தப்பிள்ளை பற்குணநாதன் - பட்டிக்குடியிருப்பு, நெடுங்கேணி - மணலாறு)

**2 ம் லெப். ரகுநாத்** (தில்லையம்பலம் பிரகாஷ்-மீனாட்சியம்மன் கோயிலடி - வல்வெட்டித்துறை)

**2-ம் லெப்.இராஜேந்திரம்** (முத்து யோகராசா - புன்னாலைக்கட்டுவன் - யாழ்)

**லெஸ்ரன்** (அருளம்பலம் தவக்குமார்- மானிப்பாய்-யாழ்)

1992ஆம் ஆண்டு மணலாற்றில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த,

**வெற்றிக்கொண்டான்-நவசிங்கம்-நவசங்கர்** (செபஸ்தியாம்பிள்ளை கஸ்ரன்பேணாட்-குருநகர் - யாழ்)

**முருகமூர்த்தி-முருகவேல்** (தங்கலிங்கம் கோணேஸ்வரன்- மஞ்சத்தடி, இணுவில் - யாழ்)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

★ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்கள்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-9924)

# காஷ்மீர் - இந்தியாவின் இரண்டாவது தமிழீழம்

தமிழீழத்தின் மூலை முடுக்கெல்லாம் இந்தியப்படை தரித்து நின்றபோது என்னென்ன வதைகளை கட்டவிழ்த்து விட்டதுவோ அவையெல்லாம் இன்று மீண்டும் காஷ்மீரில் மீண்டும் 'அரங்கேறுகின்றன. இங்கிருந்து வெளியேற்றப்பட்ட பின் கடந்த நான்கு ஆண்டுகளாக காஷ்மீரில் பரவி நிற்கும் நான்கு இலட்சத்திற்கும் மேற்பட்ட இந்திய பாதுகாப்புப் படையினர் செய்யும் வதைகள் இன்று உலகப் புகழ் பெற்றவை. எனவே இவை எதிர்பார்த்த பலனை தராதது மட்டுமன்றி பாதகமான விளைவுகளை இப்போது ஏற்படுத்த தொடங்கிவிட்டன. மோசமான மனச்சோர்வால் பீடிக்கப்பட்டிருக்கும் இந்தியப் படையினர் குறிப்பாக B.S.F எனப்படும் எல்லைப்பாதுகாப்புப்படையினர் எடுத்ததுக்கெல்லாம் மக்களைக் கொல்வது வழமையாகி விட்டது. அண்மையில் பியுபோரா எனுமிடத்தில் நடைபெற்ற 40 பொதுமக்கள் கொல்லப்பட்ட படுகொலைச்சம்பவம் ஏற்படுத்திய கண்டனக் கணைகளை இந்திய அரசால் தாங்கவே முடியாது போயிற்று. எனவே இப்போது டெல்லி அதிகார பீடம் கதையைமாற்றுகிறது. நாடகத்தின் அடுத்த காட்சி இப்போது அரங்கேறத்தொடங்கிவிட்டது. எனவே இப்போது செய்திதொடர்பு சாதனங்களில்- செய்தி இதழ்களில் பெருமெடுப்பில் காஷ்மீர் மக்களின் மனிதஉரிமைகள் பற்றி கவலை தெரிவிக்கப்படுகிறது. மனித உரிமை மீறல் விசாரணைக்குழுக்கள் அமைக்கப்படுகின்றன. சில படையினரும் தண்டிக்கப்படுகின்றனர்.

அதேசமயம் இன்னோர் தந்திரோபாய அணுகுமுறையையும் கடைப்பிடிக்கின்றது இந்தியஅரசு. காஷ்மீர்போராளிகளிடையேகடும்மோதல்என்றும்- மக்கள் போராளிகளை வெறுக்க தொடங்குகின்றனர் அவர்கள் சனநாயக வழிகளில் ஆர்வம் காட்டுகின்றனர். எனவே சனநாயக அரசியலை புகுத்த காலம் கனிகிறது என்றும் நாள்தோறும் அறிக்கைக்கு மேல் அறிக்கையாக விடப்படுகிறது. காஷ்மீரின் இன்றைய நிலைக்கு பாக்கித்தானே காரணமென்றும் சனநாயகத்தை போராளிக்குழுக்கள் குழி தோண்டி புதைப்பதாகவும் கூறும் இந்திய அரசின் உண்மை முகம் என்ன? காஷ்மீர் மக்களின் சனநாயக உரிமைகளை பறித்து அவர்களின் அழகிய பள்ளத்தாக்கில் அமைதியான வாழ்வில் நெருப்பை அள்ளிக்கொட்டியவர்கள் யார்? இந்த உண்மைகள் எல்லாம் வெளித்தெரியா வண்ணம் இன்று இந்திய அரசு மேற்கொள்ளும் பிரசாரம் ஒரு நாள் இறுதியில் பெரும் சிக்கலில் இந்தியாவை மாட்டிவிடப் போகின்றது என்பதை -இப்பிரச்சினைகள் மாறான விளைவுகளையே ஏற்படுத்திவிடும் என்பதை தமிழீழத்தை உதாரணம் காட்டி இன்று இந்திய அரசுக்கு நேர்மையான அரசியல் ஆய்வாளர் சிலர் இடித்துரைக்கின்றனர். ஆனால் இவற்றையெல்லாம் காதில் போட டில்லி ஆளும் வருக்கம் தயாராக இல்லை. அன்றிலிருந்து இன்று வரை ஒரு நேர்மையான அரசியல் அணுகுமுறையைத் தான் காஷ்மீரில் கடைப்பிடிக்கவில்லை என்பதையும் அதனாலேயே அங்கு விடுதலைப் போராட்டம் முனைப்படைந்தன என்பதையும் ஏற்க இந்திய அரசு மறுப்பது மட்டுமன்றி இப்போது மேலும் தொடர்ந்து பல குறுக்கு வழிகளையே கையாள முயல்கிறது.

குறிப்பாக காஷ்மீர் விடுதலை தொடர்பாக இரு வேறுபட்ட நிலைப்பாடுகளை கொண்டுள்ள இரு வேறு அமைப்புகளிடையே மோதல்களை மூட்டி விடுவதில் இந்திய அரசின் முழுக்கவனமும் இப்போதுள்ளதாக கூறப்படுகின்றது. அண்மைக்காலமாக இத்தகைய குழு மோதல்கள் அங்கு நடக்கத் தொடங்கியிருப்பதும் இங்கே குறிப்பிடப்படவேண்டிய செய்தி 1980 களிலிருந்தே இயங்கி வரும் இசுலாமிய மத தீவிர தன்மையற்ற காஷ்மீரின் விடுதலையை முன் வைத்து போராடி வரும் JKLF எனப்படும் ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணிக்கும் இசுலாமிய அடிப்படைவாத கொள்கையை அடிப்படையாக கொண்ட ஜமாதி இசுலாமி (Jamait - e - Islami) யின் இராணுவப் பிரிவான கிஸ்புல் முஜாகுதீன் (Hizbul Mujahedin) அமைப்பிற்கும் மோதலை மூட்டி விடுவதே இந்திய உளவு அமைப்புகளின் முழு நேரப் பணியாகவுள்ளது. ஏனென்றால் ஜம்முகாஷ்மீர் பகுதி விடுதலையைப் பெற்று பாக்கித்தானோடு சேர வேண்டும் என்கின்ற கிஸ்பி அமைப்பிற்கே தற்போது பாக். அரசு முழு அளவில் உதவி வழங்குவதும் -காஷ்மீர் மக்களுக்கு பாக்கித் தானோடு இணைவதைத் தவிர வேறு தெரிவில்லை என பெனாசீர் அம்மையார் அடிக்கடி கூறி வருவதும் மோதலை மூளப் பண்ண சாதகமாகி விடுகிறது. அத்தோடு கிஸ்புல் அமைப்பின் வளர்ச்சி காரணமாக பாக்கின் உதவி குறைந்ததாலும் JKLF அமைப்பு சற்று தூப்போது தளர்ந்திருப்பதும் உண்மையே.

> **"காஷ்மீரில் ஒரேயொரு தேர்தல் மட்டுமே நடக்க முடியும்; அது காஷ்மீரின் விடுதலைக்காக மட்டுமே இருக்கும்." - ஜே. கே. எல். எப். தலைவர் ஒருவரின் கூற்று.**

எனவே முனைப்படைந்து வரும் காஷ்மீர் மக்களின் போராட்டத்தை திசை திருப்ப பேச்சு வார்த்தைகட்கு தான் தயாரென கூறியது மட்டுமன்றி கடந்த 4 வருட காலமாக இந்திய சிறையிலிருந்த JKLF அமைப்பின் மூத்த தலைவரான முகம்மது யாசின் மாலிக்(Malik) என்பவரை அவரது மோசமான உடல் நிலை கருதி விடுவித்து விட்டது. இவருக்கு மேல் இந்திய விமானப்படை அதிகாரிகளை கொன்றமை, மத்திய அமைச்சர் மகளொருவரை கடத்தியது என பல குற்றச்சாட்டுகள் முன்னர் சுமத்தப்பட்டிருந்தன. இவரை விடுவித்த கையோடு சனநாயக வழிமுறைகளை காஷ்மீரில் புகுத்தப்போவதாக கூறியமை இயக்கமோதல்கட்கு இப்போது வழிவகுக்கவே என்பது தெளிவாகி விட்டது. இந்திய அரசின் கைக் கூலிகள் என யாசின் மாலிக்கை வருணித்த சில பாக். ஆதரவு அமைப்புகள் அவரை இரு தடவை கொலை செய்ய முயன்றன. அவரது முக்கிய ஆதரவாளர் பலர் இப்போது கொல்லப்படுகின்றனர். அதேசமயம் JKLF தரப்பிலிருந்தும் பாகிஸ்தானை கண்டித்து கடுமையான அறிக்கைகள் வெளியாகின இவ்வாறாக நிலைமை சிக்கல் தோன்றத் தொடங்கின.

எனினும் காஷ்மீரின் பல தரப்பட்ட அரசியல் அமைப்புகளையும் பிரதிநிதித்துவப் படுத்தும் மூத்தோர் அமைப்பான குரியத்மாநாட்டுஅமைப்பிற்கு (Huriyat Conference) நிரம்பிய செல்வாக்குண்டு. அவர்கள் இயக்க மோதல்களைத்தவிர்க்க முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றன. இத்தகைய மோதல்கள் போராட்டத்தைத்திசை திருப்பும் என்பதை உணர்ந்த மாலிக்கும் சமரசப் போக்கையே கடைப்பிடிக்க விரும்புவதாகத் தெரிகிறது. கிஸ்புல் அமைப்போடு நல்லுறவைப் பேணப்போவதாக கூறும் அவர் பாகிஸ்தானைக் கடுமையாக விமர்சித்த தனது கட்சிப் பேச்சாளரை பதவியிலிருந்து நீக்கிவிட்டார். அது மட்டுமின்றி இந்தியாவோடு எப்போதும் காஷ்மீர் சேர்ந்திருந்தது கிடையாது என்றும் நிபந்தனைகளற்ற பேச்சுவார்த்தைகள் என்றாலேயே இந்தியாவோடு பேசமுடியும் என்றும் காஷ்மீர் மக்கள் தமது வாழ்விற்கான போராட்டத்தை வீறுடன் தொடருவார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார். இவை இப்போதைய நிகழ்வுகள். ஆனால் அழகு கொழிக்கும் அமைதிப் பூங்காவாக இருந்த காஷ்மீர் பள்ளத்தாக்கை பிணங்கள் குவியும் மரணப் பள்ளத்தாக்காக இந்தியா எவ்விதம் மாற்றியது? சனநாயக மரபுகள் அங்கு எவ்விதம் குழிதோண்டி புதைக்கப்பட்டன என்பது நாம் ஈங்கு ஒருதடவை மனம் கொள்ள வேண்டிய செய்திகளாகும்.

இந்தியா இப்போது காஷ்மீர் மக்கள்மீது தொடுத்துள்ள போரை 'நான்காவது போராக' சில வரலாற்றாசிரியர் வர்ணிப்பர். இந்தியாவின் முதலாவது போர் என்பது கபடத்தனமானமுறையில் ஜம்மு காஷ்மீர் பகுதி இந்தியாவோடு இணைக்கப்பட்டதைக் குறிக்கும் 1947-ம் ஆண்டளவில் காஷ்மீர் பகுதியை ஆண்டுவந்த இந்து மகாராசாவான கரிசிங் என்பவர் தனது மேலாண்மைக்கு எதிராக வடமேற்கு எல்லை மாநில பூர்வீக மக்கள் படையெடுப்பு நடத்த முற்பட்டபோது இந்திய இராணுவத்தின் உதவியை நாடினார். இதற்குப்பதிலாக நேரு தந்திரமான முறையில் ஜம்மு காஷ்மீர் பகுதியை இந்தியாவோடு இணைக்கக் கூடிய வழியைக் கொண்டுள்ள உடன்பாடு ஒன்றினை செய்து கொண்டார். அப்போது அப்பகுதியின் தனித்துவம் பாதுகாக்கப்படும் என்றும் அவரால் கூறப்பட்டது. இவ்வுடன்பாட்டையே காரணம் காட்டி சட்டரீதியாகக் காஷ்மீர் பகுதி தன்னுடையது என்று இந்தியா கூறிவருகிறது. ஆனால் சர்வதேச சட்ட வல்லுநர் கருத்துப்படி அவ்வாறாக ஆட்சி அதிகாரம் கைமாற்றப்படமுடியாது என்பதாகும். அத்தோடு பெரும்பான்மை மக்களான முசுலிம் மக்களின் விருப்பம் அறியப்படாததோடு இன்று இருப்பது போல் அன்று ஜம்மு காஷ்மீர் பகுதி நிருவாக ரீதியில் ஒன்றிணைக்கப்பட்டதாகவோ பொதுத் தன்மை கொண்டவொரு புவியியல்பிரதேசமாகவோ இருக்கவில்லை. அதுமட்டுமன்றி மன்னராட்சிக் கைமாற்றத்தை அப்போதைய மன்னர் பரம்பரையைச் சேர்ந்த சேக் அப்துல்லாவிடமே கையளிக்கப்படத்தக்கதாக ஏற்பாடுகள் செய்யப்பட்டது. பின்னர் ஜம்மு காஷ்மீர் பகுதிகள் தனித்துவத்தைப் பேணும் வகையில் ஏற்பாடுகள் அரசியல்யாப்பில் செய்யப்பட்டன. இந்தியாவின் ஏனைய மாநிலங்களை விட கூடுதல் அதிகாரம் கொண்டதாக இந்திய அரசின் சட்டங்களை ஜம்மு காஷ்மீர் நாடாளுமன்றம் ஏற்றுக் கொண்டாலே அப்பகுதியில் அவை நடைமுறைக்கு வரும் என்கிற விசேட ஏற்பாடுகளைக் கொண்டதாக விசேட பிரிவாக இலக்கம் 377 என அரசியல் யாப்பிலேயே பிரிவு ஒன்றை ஏற்படுத்தவும் வழி வகுக்கப்பட்டது. ஆனால் இவையெல்லாம் பின்னர் காற்றில் பறக்கவிடப்பட்டன.

இந்தியாவின் இரண்டாவது போராகக் கூறப்படுவது பாகித்தான் 1965-ம் ஆண்டளவில் படையெடுத்து காஷ்மீரின் ஒரு பகுதியை தன்னோடு இணைத்த போது ஏற்பட்டது. மூன்றாவது போராகக் கருதப்படுவது காஷ்மீர் மக்களுக்கு முன்னர் நேருவால் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை இந்திய அரசு மீறிய போது காஷ்மீர் மக்கள் கிளர்ந்தெழுந்த போது அவர்கள் மேல்ஏவப்பட்டஅடக்குமுறைகளைக் குறிக்கிறது 1989-90 ஆண்டுகளிலேயே இவ்அடக்கு முறைகள் உச்சம்பெற்றன. 1983-84களின் பின்னர் இந்திரா காந்தி ஆட்சிக் காலத்தின் போது காஷ்மீர் தொடர்பான தமது கொள்கையை இந்திய அரசு மாற்றியது. அதுவரை சேக் அப்துல்லாவின் மகன் பரூக் அப்துல்லாவின் தேசிய மாநாட்டுக் கட்சியுடனான தனது உடன்பாட்டை முறித்த இந்திரா காந்தி அம்மையார் காங்கிரஸ் கட்சி நலன்களை முன்வைத்து குறுகிய நோக்கில் செயல்படத் தொடங்கினார்.

**பாலகுமாரன்**

அதுமட்டுமன்றி ஜம்மு காஷ்மீர் பகுதியில் பெரும்பான்மையாக இருந்த இந்து மதத்தைச் சார்ந்தோரிடம் தமது செல்வாக்குத் தளத்தை உருவாக்க முயன்று மதபேதத்தை உருவாக்கினார். பின்னர் யாப்பின் 370 பிரிவானது தூக்கி வீசப்பட்டது. நேரடியாக ஆளுனர் ஆட்சி முறை கொண்டு வரப்பட்டது. ஓய்வுபெற்ற பாதுகாப்புப்படை அதிகாரிகளைக் கொண்டு அடக்குமுறை ஆட்சியொன்று அங்கே அரங்கேற்றப்பட்டது. இதுவே மூன்றாவது போராகிறது.

இதன் பின்னரே நிலைமைகள் வெகுவாக மோசமடைந்தன. 1981ஆம் ஆண்டளவில் J.K.L.F அமைப்புத் தோற்றம் பெற்றது. அடக்குமுறைகள் அதிகரிக்க பாகித்தான் உதவி பெற்ற இசுலாமிய மத அடிப்படைவாதக் குழுக்கள் பலம் பெறலாகின. பதிலாக மென்மேலும் இராணுவ அடக்குமுறையே முடுக்கிவிடப்பட்டன, மக்களின் சனநாயக உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுக்காமல் இப்போது இந்தியா மேற்கொண்டுள்ள இராணுவ ஆட்சிமுறையே காஷ்மீர் மக்கள் மேல் இந்தியா தொடுத்துள்ள நான்காவது போராகக் கூறப்படுகிறது. எவ்வித அரசியல் நேர்மையற்ற தார்மீக ரீதியற்ற இந்த அடக்குமுறைக் கொள்கையின் மோசமான விளைவே இன்று காஷ்மீரில் இந்து - முசுலிம் மோதலாக உருவெடுத்து விட்டது. அதிலும் குறிப்பாக பாரதீய சனதாக் கட்சியோ குறையும் தனது செல்வாக்கைத் தக்கவைக்க காஷ்மீர் பகுதியில் தலையிட்டு இந்து மத வெறியைப் புகுத்தி குட்டையைக் குழப்பி வருகிறது. அதேசமயம் வழமை போலவே இந்தியாவின் பலதரப்பட்ட உளவு அமைப்புகளும் அங்கு தலையிட்டு மனம் போன போக்கில் செயல்படுகின்றன. இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் மத்திய உள்விவகார அமைச்சர் சவானிற்கும் அவரது துணை அமைச்சர் ராஜேஸ் பைலட்டிற்கும் நடக்கும் பனிப்போர் விளைவாகவும் காஷ்மீர் நிலை மேலும் குழப்பமடைகின்றது. மத்திய அமைச்சர்களின் பரிசோதனைக் களமாக அவைகள் தமது செல்வாக்கினைப் பெருக்க பயன்படுத்தும் அரசியல் மேடையாக ஜம்மு காஷ்மீர்மாறிவிட்டதாகஅண்மையில் பிரபல ஆய்வாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

எனவே இவ்வாறாக இந்திய அரசின் தான் தோன்றித்தனமான போக்கால் காஷ்மீர் குருதி சிந்துகிறது. எனினும் தொடர்ந்து போராடுகிறது. அங்கு முன்னர் போல் சனநாயகவழி முறைகளை புகுத்தப்போவதாக கூறி இப்போது மீண்டும் லண்டனிலிருந்து பரூக் அப்துல்லா வரவழைக்கப் படுகின்றார். ஆனால் இந்த அரசியலெல்லாம் காஷ்மீர் மக்களிடையே இனிமேல் எடுபடாது என்றே கருதப்படுகிறது. காஷ்மீரில் ஒரு தேர்தல்தான் நடத்த முடியும். அது காஷ்மீரின் விடுதலைக்காக மட்டுமே இருக்கும் என்கிற போராளித் தலைவர் ஒருவரின் கூற்றே இதனை உறுதிப்படுத்துகிறது.

தாமதித்தால்
வாய்ப்பு
நழுவிப் போகலாம்

தங்கப் பதக்கம்

அதைக் கண்டெடுப்பது சுலபம்
இம்மாத
நங்கூரம்
படியுங்கள்.
(சி-9926)

# உயிராயுதம்

## ஒரு நோக்கு

பூட்கள் நிறைந்த ரோஜாச் செடியில் அழகிய மலர்கள் மலர்வதுஇயற்கையானது தான். அழகிய ரோஜா மலரொன்று திரை முழுவதையும் ஆக்கிரமிக்க வரலாற்றுப் பதிவுச் சித்திரமான உயிராயுதம் திரைகளில் விரியத் தொடங்கியது. வைத்த கண்ணை மீள எடுக்க முடியாத அளவுக்கு திரைக்குள் இருந்து ஒரு கவர்ச்சி விசை இருப்பைக் கவரும் காந்த மன ஈர்த்து வைத்து விடுகின்றது என்பது மிகையானதல்ல.

கரும்புலிகள் என்பவர்கள் யார்? மக்களை எந்தளவுக்கு ஆழமாக நேசித்தார்கள்? எதிர்காலத்தில் ஈட்டப்படும் வெற்றிகள் குறித்து துளியளவும் பிசகாத நம்பிக்கையையும், அதன் அடிப்படையிலான உறுதிப்பாடும் இலக்கைத் தகர்க்கும் இறுதிக் கணம் வரையும் நீடிக்க முடிந்தது எப்படி? வாழ்க்கைக் காலத்தின்கால் பங்கைக் கூட கடந்து முடிக்காத பருவமுடைய இவர்கள் இமாலய சாதனைகளை நிகழ்த்தி தியாகத்திற்கு புது வரைவிலக்கணம் படைக்க ஏன் முற்பட்டார்கள்? என்பன உட்பட பல்வேறு வினாக்களுக்கும் விடையளிக்கும் ஒரு காவியமாகவே உயிராயுதம் வெளியிடப்பட்டுள்ளது. துளியும் கற்பனை கலக்காத காட்சிகளை சுவைபடத் தொகுத்து வெளியிடப்பட்டுள்ள உயிராயுதம் இன்றைய இம் மண்ணில் வாழும் ஒவ்வொருவரும் தம் விழித் திரையில் பதித்துக் கொள்ள வேண்டிய காவியம் என்றால் மிகப் பொருத்தமானதாகும்.

முதலாவது கரும்புலித் தாக்குதல் நிகழ்த்தப்பட்ட 1987 ஜூலை 5-ம்திகதி நெல்லியடி இராணுவ முகாம் தகர்ப்பு சம்பவம் தொடக்கம் ஒப்பரேசன் தவளை எனப் பெயர் சூட்டப்பட்டு பூநகரியில் அமைந்திருந்த ஈரூடகத் தாக்குதல்களின் வெற்றிக்கு பக்கத்துணையாகிட பலாலி இராணுவ முகாமினுள் புகுந்து கரும்புலிகள் நடத்திய தாக்குதல் ஈறாக ஏழு சந்தர்ப்பங்களில் கரும்புலிகளாகிப் புறப்பட்டவர்களின் இறுதி நேரங்களின் தொகுப்பாக உயிராயுதம் விளங்குகின்றது. நிதர்சனம் நிறுவனம் வழங்கியுள்ள இப்படைப்பு கலாபூர்வமானதாக மட்டுமன்றி கருத்தில் நிறையும் காவியமாகவும் வளர்ந்துள்ளது. பொருத்கமான பாடல்களின் பின்னணியுடன் காட்சிகளை ஒழுங்குபடுத்தியிருக்கும் விதமும் நிச்சயம் பாராட்டப்பட வேண்டியதே.

எப்படியெல்லாம் இன்றைய தலைமுறை போராடி எமக்கான விடுதலையை பெற்றுத் தந்துள்ளார்கள் என்று எதிர்கால சந்ததியினர் உணர்ந்து கொள்ளக் கூடிய வகையில் உயிராயுதம் வரலாற்று ஆவணமாக விளங்கும். விமானங்களின் குண்டு வீச்சுக்கும் எறிகணைத் தாக்குதல்களுக்கும் இன்னபிற இராணுவ அச்சுறுத்தல்களுக்கும் மத்தியில் சற்றும் குலையாதமன உறுதியுடன் இந்தப் போராட்டம் எப்படி வழி நடாத்தப்பட்டு வருகின்றது என்பதையும் இந்தப் படைப்பு தெளிவாக விளக்குகிறது. வழிகாட்டும் பாத்திரத்தை ஏற்றுள்ள தேசியத் தலைவர் ஒவ்வொரு சம்பவத்தையும் திட்டமிட்டு விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் பண்பும் துல்லியமாக சித்தரிக்கப்பட்டுள்ளது.

அழகான மலர்கள் செடிகளுக்கு விலாசத்தை வழங்குவது உண்மையே ஆயினும் மலர்களின் இருப்புக்கும், கவர்ச்சிக்கும் வேர்கள் தான் அத்திவாரம். மண்ணுக்குள் தம்மைப் புதைத்துக்கொண்டு நீரையும் கனிப் பொருட்களையும் தேடித்தேடி நீண்டு வளைந்து செல்லும் வேர்களின் ஊட்டத்தில் தான் செடிகள் உயிர் வாழ்வதும் மலர்களைப் புஷ்பிப்பதும் சாத்தியமாகிறது. இந்தநிலையில் வேருக்கு வெளிச்சம் பாய்ச்ச முற்பட்டால் அது செடிக்கே ஆபத்தாக முடிவது தவிர்க்க முடியாததே இந்த ஆபத்தை நன்கு உணர்ந்த வகையில் 'உயிராயுதம்' என்ற இந்தப் படைப்பு தொகுக்கப் பட்டிருப்பது தான் இதன் வெற்றிக்கு பிரதான காரணமாகும்.

மக்களுக்காக - மக்களின் மேன்மைக்காக - தாம் பிறந்து தவழ்ந்து விளையாடிய மண்ணின் மீட்பிற்காக எந்தவிதமான எதிர்பார்ப்புகளுமின்றி தமது உயிரைத் தற்கொடையாக்க முன்வரும் கரும்புலிகள் பற்றிப் புரிந்து கொள்வதற்கு இப் படைப்பு சிறிதளவுக்கே துணை செய்ய முடியும் ஏனெனில் சொற்களுக்குள் சிக்காத சிறப்பங்களான இவர்களின் உள்ளக் கிடக்கைகளையும், எண்ணத் தெறிப்புக்களையும் சித்தரிக்க முற்பட்டால் வார்த்தைகள் வலுவிழந்து போகும். மொழி புதிய சொற்களைத்தேடி அகராதிகளைப் புதுப்பித்துக் கொள்ள நேரும். அதற்கு உயிராயுதம் என்பது ஒருஉதாரணம். ஒரு உயிர் ஆயுதமாக விரிந்து குறி பிசகாமல் எதிரியின் இலக்குகளைத் தகர்க்கும் இச்சித்திரம் எவருக்கும் உணர்ச்சி நரம்புகளைமுறுக்கேறச் செய்யும் என்பது நிச்சயம்.

**இளையவன்**

## சிறுகதை

# தொடரும் சுமைகள்

விடிந்து வெகு நேரமாகி விட்டது பாரிஸ் நகரின் ரம்மியத்தை ரசிக்க மனமற்று கலங்கிய கண்களுடன் கட்டிலில் படுத்திருந்தான் ரஞ்சன்.

ரஞ்சனுடன் இணைந்து நீண்ட காலமாக ஒரே தொழிலகத்தில் வேலை செய்யும் அவன் நண்பன் - மோகன், ரஞ்சனின் றூம் சலசலப்பின்றி இருப்பதை அவதானித்து அதினுள்ளே நுழைகிறான்.

ரஞ்சன் வழக்கத்தை விட மிக வினோதமாக விடிந்து பல மணி நேரமான பின்னரும் படுக்கையில் கிடப்பது மோகனுக்கு பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது.

" டேய்... ரஞ்சன் ... என்ன மச்சான் உனக்கு நடந்தது ?''

மோகனின் குரலைக் கேட்டவுடன்,ரஞ்சன் தன்முகத்தை கைகளினால் பொத்தமுனைந்தான். முடியவில்லை. கன்னத்தில் கண்ணீர் பிசுபிசுத்துக் காட்டிக் கொண்டிருந்தது அவனின் நிலையை.

மோகன் அவன் கட்டிலின் ஓரத்தில் சென்றமர்ந்தான்.

'' சொல்... மச்சான்.., ஏன் வேலைக்கு வராமல் அழுது கொண்டிருக்கிறாய்... மச்சான் எனக்குசொல்லமாட்டாயா?''

ரஞ்சன் - மோகனை ஒரு கணம் வெறித்துப் பார்த்து விட்டு,

'' உனக்குச் சொல்லி என்னடா ஆகப்போகுது?''

''எதுவெண்டாலும் சொல்லடா...''

''என்னை நிம்மதியாக இருக்க விடடா...''

''உன்ரை நிம்மதிக்காகத்தான் கேட்கிறன்... கெதியாகச் சொல்லிப் போட்டு வெளிக்கிடு வேலைக்கு போக வேணும்...''

''அங்கை பார் '' ரஞ்சன் காட்டிய இடத்தை மோகன் நோக்கினான். மேசையின் மீது காகிதம் ஒன்று கிடந்தது.

''நீ... சொல்லிறது விளங்கேலை மச்சான்...''

''யாழ்ப்பாணத்திலிருந்து அம்மாவின் கடிதம் வந்திருக்கு..'' எழுந்து கட்டிலின் ஓரத்தில் இருந்தபடி ரஞ்சன் சொன்னான்.

''அட... நீ சந்தோஷமாக இருக்க வேணுமே ''

''ஓம்... சந்தோஷம்...''

ரஞ்சன் விரக்தியாய்ச் சிரித்தான்

''என்னடா விசேஷம்?''

''மிஷின் மாதிரி உழைச்சு என்னத்தைக் கண்டது ..''

''என்னடா விரக்தியாய்ப் பேசுறாய்''

''மச்சான் மோகன்... எத்தனைபேர் வீட்டு நினைவோடு இருக்கிறாங்கள் சொல் பார்ப்பம். ஒரு இடத்தில் மட்டும் வேலை செய்து போட்டு அந்தக்காசை எடுத்து குடியும் கும்மாளமுமாக இருக்கிறான்கள்-- நான் அப்படியா மச்சான் இருக்கிறன் சொல்லு''

மோகன் விழிகளை அகல விரித்து- மிக ஆர்வத்துடன் ரஞ்சனின் முகத்தைப் பார்த்தான்.

''என் வீட்டுக்காரர் கஷ்டமில்லாமல் சந்தோசமாக இருக்கவேணுமென்பதற்காக உழைக்கிறகாசை கொஞ்சம் கொஞ்சமாக மிச்சம்பிடித்து சீட்டுப் போட்டு வீட்டுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறன். அங்கையிருந்து வருகிற கடிதம் ஒன்றென்றாலும் திருப்தியாக இருந்ததோ என்றால், அதுதான் இல்லை' ரஞ்சன் கண்களை துடைத்துக் கொண்டான்.

வீதியில் செல்லும் வாகனங்களின் இரைச்சல் அவர்களின் சம்பாஷணைக்கு இடையூறாக இருந்தது.

''சொல் மச்சான்......''

மோகன் அனுதாபத்துடன் அவன் பேச்சைக் கேட்க ஆவலடைந்தான்.

மோகன் ..... மூத்த தங்கச்சிக்கு கலியாணம் செய்வதற்கு சீதனப்பணம் கேட்டு கொஞ்ச நாளைக்கு முன் அம்மாவிடமிருந்து கடிதம் வந்தது. காசு அனுப்பினன். அந்தக்காசிலை தம்பி மோட்டர் சைக்கிள் வாங்கி ஓடித்திரியிறானாம் மிச்சக்காசிலை வீட்டைத் திரித்தியிருக்கினமாம்......

''மாப்பிள்ளை வீட்டாருக்கு சீதனம் கொடுப்பதற்கு இன்னும் அஞ்சு லட்சம் காசு அனுப்பி விடச்சொல்லி இப்ப திரும்பக் கடிதம் வந்திருக்கு மச்சான் ..... நான் என்னடா செய்யிறது...... ?''

'உன்ரை பிரச்சினை விளங்குது மச்சான்...... நீ என்னடா செய்யப்போகிறாய் ..'

மோகன் அவன் முகத்தை பரிதாபத்தோடு பார்த்துக் கேட்டான்.

''மச்சான் மோகன் ..... தங்கச்சியும் தம்பியும் கடிதம் போட்டிருக்கினம் தம்பிக்கு சைக்கிள் வாங்க காசு வேணுமாம்...... தங்கச்சி நகை வேண்டப் பணம் கேட்கிறாள்.. ...''

ரஞ்சன் கலங்கிய கண்களை துடைத்துக் கொண்டான்.

''மோகன் .. இயலும் மட்டும் உழைக்கிறன் இனி என்ன நான் களவுக்கா போறது? இரவு பகலாக நித்திரை முழிச்சு உழைச்சு வீட்டுக்கு அனுப்பியும் அது போதா விட்டால் என்னடா செய்யிறது?'

''மச்சான் மோகன் தங்கச்சி தன்ரை கடிதத்திலை ஒரு வரி எழுதியிருந்தாள் அதை சொல்லிறன்டா கேள் .. தனக்கு இந்தக் கலியாணத்திலை இஸ்ரமில்லையாம் .. தன்னோடு படிச்ச பெட்டையள் எல்லோரும் டொக்டரையும், எஞ்சினியர் எண்ணு கட்டியிருக்கிறாளவையாம் .. நான் என்னடா செய்யிறது .. இந்தச் சம்பந்தத்திற்கே சீதனம் குடுக்க என்னாலை முடியாமல் இருக்கு எனக்கு விசரா வருது ''

மோகன் அவனை கவலையுடன் பார்த்தான்.

''மச்சான் மோகன் இருப்பதைக்கொண்டுதான் எதையும் செய்ய வேணும் சீ .. என்டை வாழ்க்கை இது .. ஊருக்கேதிரும்பிப்போய்அங்கு தோட்டம் கொத்தினாலும் நிம்மதியா இருக்கலாம் போல யோசனை வருகிறது ..''

மோகன் ஜன்னல்களுக்கு வெளியே சென்று கொண்டிருக்கும் வாகனங்களை பார்த்த வண்ணம் ரஞ்சனின் நிலையை யோசித்துக் கொண்டிருந்தான்.

திடீர் என்று அழுகைச் சத்தம் கேட்க ரஞ்சனை நோக்கினான். ரஞ்சன தலையணைகளுக்கிடையில் முகத்தை புதைத்து கேவிக் கேவி அழுது கொண்டிருந்தான்.

அவன் நன்கு அழவேண்டும். விம்பி விம்மி .. விசும்பி விசும்பி அவன் அழவேண்டும். அவனது அழுகை அவன் மனசைச் சுத்தப்படுத்தும் என எண்ணி ஜன்னல்களுக்கு வெளியே வெறித்துப் பார்க்கத்தொடங்கினான் மோகன்.

**சசிகரன்**


எமது வாழ்வு இயக்கங்களை,
எமது சூழலின் எழிற்கோலங்களை
உங்கள் புகைப்படக்கருவிகள்
சிறைப்பிடித்துக் கொள்ளட்டும்.



நங்கூரம்

இரண்டாம் ஆண்டு
நிறைவையொட்டிய

புகைப்படப் போட்டி

★ புகைப்படங்கள் கறுப்பு -வெள்ளையில் 16சமீ × 12 சமீ பரிமாணத்தில் இருத்தல் வேண்டும்.

★ இது வரை பிரசுரமாகாத, வேறுபோட்டிகளில் பரிசு பெறாத புகைப்படங்களே ஏற்றுக்கொள்ளப்படும், ஒருவர் எத்தனை படங்களும் அனுப்பிவைக்கலாம்.

★ தெரிவு செய்யப்படுமிடத்து, அப்புகைப்படத்துக்குரிய எதிர்ப்படச் சுருள் நடுவர்களின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

★ முழுப்பெயர், வயது வதிவிடமுகவரி, மாணவராயின் பயிலும் பாடசாலை, பயன்படுத்திய புகைப்படக்கருவி- புகைப்படச்சுருளின் பெயர்கள், படம் பிடிக்கப்பட்ட இடம், பிரதிசெய்த புகைப்படநிலையம் போன்ற விபரங்களும் படத்திற்கான தகுந்த தலைப்பும் இணைக்கப்படல் வேண்டும். புகைப்படத்தில் எதனையும் குறிப்பிடலாகாது.

★ 31-07-94இற்கு முன்னர் நிர்வாக ஆசிரியர், நங்கூரம், அரசடிவீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் நேரில் அல்லது தபால் மூலம் சேர்ப்பிக்கவும்.

இன்றே தயாராகுங்கள்!
பரிசுக்குரியவர் நீங்களாயுமிருக்கலாம்.

(சி-9927)

நல்லூர் பிரதேச நூலகம்,

# ஹேமாவின் அரசியற் பிரவேசம் ஆரம்பம் முதலே முட்டுக்கட்டைகள்

திருமதி ஹேமா பிரேமதாசாவிற்கு ஐ. தே. க. பொறுத்த நேரத்தில் திட்டமிட்டு பழிவாங்கியதா என்பது குறித்த சந்தேகங்கள் இப்போது தென்னிலங்கை அரசியல் வட்டாரங்களில் கிளம்பியுள்ளன. என்னைக்கொல்லுங்கள்; ஆனால் எனது நற்பெயரை கொல்லாதீர்கள் என மேடையில் முழங்கிய ஒரு நாட்டின் ஜனாதிபதியின் மனைவிக்கு இப்போது அவரது சொந்தக் கட்சியினராலேயே முகத்தில் கரி பூசப்பட்டுள்ளது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் திருமதி ஹேமா பிரேமதாசா, அவரின் மகன் சஜீத் பிரேமதாசா ஆகியோர் ஐ. தே. க. சார்பில் முறையே கொழும்பிலும், அம்பாந்தோட்டையிலும் போட்டியிடப் போவதாக முதலில் அறிவித்தனர். இதன் பின்னர் ஒருசில காரணிகளால் தாம் போட்டியிடவில்லை என அவர்கள் அறிவித்தனர். பின் மீண்டும் ஹேமா தாம் கொழும்பில் போட்டியிடப் போவதாக அறிவித்த அதே வேளை மகன் சஜீத் தாம் தேர்தலில் பங்கேற்கப் போவதில்லை என அறிவித்தார். இவற்றிற்கு பின்னணி என்ன?

## துலாஞ்சலியின் உறுதிப்பாடு

ஹேமா பிரேமதாசாவும் சஜீத் பிரேமதாசாவும் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக தீர்மானம் எடுத்த சமயம் பிரேமதாசாவின் மகள் திருமதி துலாஞ்சலி ஜெயக்கொடி மருத்துவ சிகிச்சைக்காக நவலோகா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார் தனது தாயாரும் சகோதரனும் தேர்தலில் போட்டியிடப் போவதான செய்தி அவருக்கு எட்டியது. ஆத்திரம் அடைந்த அவர் இருவரையும் மருத்துவமனைக்கு அவசரமாக அழைத்தார். "நீங்கள் தேர்தலில் போட்டியிடுவதென்றால் என் தந்தையின் கொலை விசாரணைகள் அப்படியே காற்றில் விடுவதா. இதை நான் அனுமதிக்கப்போவதில்லை. உங்களுக்கு எம். பி. பதவிவேண்டுமென்றால்தாராளமாக போட்டியிடுங்கள். நானோ என் தந்தையின் விசுவாசிகளோ அதற்கு தடையாக இருக்கப்போவதில்லை. ஆனால் தந்தையின் பெயரை உங்கள் நோக்கங்களுக்காகபாவிக்கவேண்டாம். அவரின் பெயருக்கு ஒரு தனித்துவம் உண்டு. அவற்றையெல்லாம் உங்கள் தேவைக்காக பயன்படுத்துவதை நான் விரும்பவில்லை" என்று பொரிந்து தள்ளினார் துலாஞ்சலி.

இதனைத் தொடர்ந்து ஹேமாவும், சஜீத்தும் தாம் தேர்தலில் போட்டியிடப்போதில்லை எனவும் பிரேமதாசாவின் கொலை குறித்து அரசு விசாரணைக்குழு ஒன்றை அமைக்காத நிலையில் நாம் தேர்தலில் பங்கேற்பதில்லை எனவும் ஓர் அறிக்கை விட்டனர். இதேசமயம் மகள்துலாஞ்சலிஜெயக்கொடி தனது தந்தை கொலை தொடர்பாக சுதந்திர விசாரணைக்குழு நியமிக்கப்படாது விட்டால் தாம் பொதுஜன ஐக்கிய முன்னணியின் சகல பிரதான பிரசார மேடைகளிலும் தோன்றி தனது தந்தையின் கொலை தொடர்பாக நியாயம் கேட்டு பிரசாரம் செய்யப்போவதாகவும் பிரதான ஐ.தே.க பிரமுகர்கள் சிலரின் சுயரூபத்தை வெளிச்சத்திற்கு கொண்டு வரப் போவதாகவும் தமது நெருங்கிய உறவினர்களுக்கு கூறி வந்தார். இதனை தனக்கு சாதகமாக்கலாம் என்றுணர்ந்த சந்திரிகா குமாரணதுங்கா நவலோகா மருத்துவமனைக்கு தானே நேரில் வந்து துலாஞ்சலியை சுகம் விசாரித்து அவருடன் சில மணிநேரத்தை செலவிட்டார். அப்போது ஹேமாவும் அங்கிருந்துள்ளார்.

இந்த சந்திப்பைத் தொடர்ந்து ஹேமாவும் துலாஞ்சலியும் இணைந்து பத்திரிகைகளுக்கு ஓர் அறிக்கை அனுப்பினர். அதில் ஹேமா தாம் ஐ.தே.க. சார்பில் போட்டியிடப்போவதில்லை என்றும் தம் கணவரின் கொலையே இதற்கு முக்கிய காரணம் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. இச் செய்தியை பத்திரிகைகளில் கண்ணுற்ற ஜனாதிபதி டி.பி.விஜேதுங்காவிற்கு கலக்கம் பிறந்தது. தொலைபேசி மூலம் உடனடியாகவே அவர் ஹேமாவுடன் தொடர்பு கொண்டார். ஹேமாவை எப்போது எங்கு சந்திக்கலாம் என்று அவர் கேட்டதற்கு ஜனாதிபதியை தமது இல்லத்திற்கு நேரில் வருமாறு அழைத்தார் ஹேமா டி. பி. விஜேதுங்கா ஹேமாவிடம் சென்று பேச்சு நடத்திய போது மகள் துலாஞ்சலி அங்கிருக்கவில்லை. அவர் மருத்துவ மனையில் தொடர்ந்து சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தார்.

ஹேமா-டி.பி. விஜேதுங்கா சந்திப்பின் போது பிரேமதாசா கொலை தொடர்பாக விசாரணைக் குழு நியமிக்குமாறு ஹேமா வலியுறுத்தினார். அதற்கு டி.பி. விஜேதுங்கா, இக்கொலை தொடர்பான பொலிஸ் விசாரணை முடிவடைந்ததும் ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழு ஒன்றை அமைக்க கொள்கை அளவில் இணங்குவதாக குறிப்பிட்டார்.

இதைத் தொடர்ந்துஹேமாவும், சஜீத்தும் தேர்தலில் பங்கேற்பதாக ஜனாதிபதிக்கு தெரிவிக்கப்பட்டது. எனினும் தாம் தேர்தலில் போட்டியிடப்போவதில்லை எனவும் தந்தையின் கொலை தொடர்பான விசாரணைக்குழு அமைக்கப்படாத வரை இதைத் தாம் இறுதிவரை வலியுறுத்தப்போவதாகவும் சஜீத் அறிவித்தார்.

ஆனால் ஹேமா தேர்தலில் போட்டியிடுவதில் ஆசைகாட்டினார். இதையறிந்த சிறிசேனகூரே வெகுண்டார். "நான் கொழும்பு மாவட்ட ஐ.தே.க. அமைப்பாளராக இருக்கும்போது என் அனுமதியில்லாமல் எப்படி ஹேமாவை கொழும்பு வேட்பாளராக நிறுத்த முடியும்? இதை நான் ஏற்கமாட்டேன். ஹேமா இங்கு போட்டியிட்டால் நான் வெளியேறிவிடுவேன். என் ஆதரவாளரான சங்கதாசாவை கொழும்பு மாவட்டத்தில் நிறுத்தும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் அல்லாவிடின் கட்சியை விட்டு வெளியேறி விடுவேன்" என்று முழங்கினார்.

இச்சமயத்தில் பிரதமர் ரணில் இம்முறை தேர்தலில் கொழும்பில் போட்டியிட திட்டமிட்டிருந்தார். கடந்த காலங்களில் கம்பஹா பகுதியிலிருந்து போட்டியிட்ட அவர் இம்முறை அங்கு சந்திரிகா குமாரணதுங்கா வேட்பாளராக நிற்பதால் தனது வெற்றிக்கு பங்கம் ஏற்படும் என அஞ்சி தனது இடத்தை கொழும்பிற்கு மாற்றிக் கொண்டார். கொழும்பு மத்தியில் போட்டியிடுவது என்ற முடிவில் இருந்த ரணிலுக்கு இத்தொகுதியில் ஹேமா போட்டியிடப் போவதாக வந்த செய்தி பெரும் இடியாக விழுந்தது. ஜனாதிபதியிடம் விரைந்த அவர் கொழும்புப் பகுதிக்கான வேட்பாளர் பட்டியலை ரத்து செய்யுமாறு கோரினார். ரணிலுக்கு ஐ. தே. க. பொதுச் செயலர் டாக்டர்காமினிவிஜயசேகரா ஆதரவளித்துப் பேசினார். கொழும்பு மாவட்ட பட்டியலில் காமினி திசாநாயக்காவின் ஆதரவாளர் ஜகத் அபேசிங்காவின் பெயர் இருந்தது. இதனை நீக்கி முன்னாள் மேயர் ரட்ணசிறி ராஜபக்சவிற்கு இடம் கொடுக்குமாறு ரணில் கோரினார். இதனை சிறிசேனகூரேயும் வரவேற்றார். இதையடுத்து ஜகத்தின் பெயர் பட்டியலில் இருந்துகழற்றப்பட்டது இதற்கு காமினி கடும் கண்டனம் தெரிவித்தார்.

இதனையடுத்து இரண்டாவது பட்டியல் தயாரிக்கப்பட்டு ஐ. தே. க. வெளியிட்டது. இதில் ஹேமா, உபுல்ஜயசூரிய ஆகியோர்களின் பெயர்கள் காணாமற் போயிருந்தன. இப்பட்டியலை பார்வையிட தம்மிடம் ஒப்படைக்குமாறு டி. பி. விஜேதுங்கா கோரியதைத்தொடர்ந்து கடந்த 6 ஆம் திகதி புதன்கிழமை இரவு அப்பட்டியல் பிரதமர் ரணிலினால் ஜனாதிபதியிடம் வழங்கப்பட்டது பட்டியலில் உள்ளவர்களின் விபரங்களை ஒவ்வொன்றாக விஜேதுங்காவிற்கு ரணில் விளக்கினார். இறுதியில் ஜனாதிபதி தனது செயலாளர். விஜேதாசாவை அழைத்து அப்பட்டியலை தனது அலுவலகத்தில் வைத்துவிடுமாறு கேட்டுக் கொண்டார்.

> **என்னைக் கொல்லுங்கள்; ஆனால் எனது நற்பெயரை கொல்லாதீர்கள் ஏனெனில் அதைநான் சிறுபராயம்முதல் பேணிவருகிறேன்**
>
> **- முன்னாள் ஜனாதிபதி**
> ஆர். பிரேமதாசா

மறுநாள் காலை அவ்வேட்பாளர் பட்டியலை தாம் நிராகரிப்பதாகவும் புதிய பட்டியல் ஒன்றை தயாரித்து வருமாறும் டி.பி விஜேதுங்க ரணிலிடம் எடுத்துக் கூறினார் இதையடுத்து ரணிலும் கட்சியின் பொதுச்செயலர் காமினி விஜயசேகராவும், சிறிசேன கூரேயும் இணைந்து புதிய பட்டியலை தயாரிக்க ஆரம்பித்தனர். இதன் போது ஹேமா பிரேமதாசா அங்கு வந்தார். அவரிடம் வேட்பாளர் விண்ணப்பப்படிவம் வழங்கப்பட்டது. அவரும் படிவத்தை பூர்த்தி செய்த பின்னர் அங்கிருந்து வெளியேறிவிட்டார் தொடர்ந்து பட்டியல் தயாரிப்புப்பணி நடந்தது. இதில் ஹேமாவின் பெயரை ஜனாதிபதி விஜேதுங்கா எவ்வளவோ எடுத்து கூறி விவாதித்த போதிலும் நீக்கப்பட்டுவிட்டது. நீக்கப்பட்ட விடயம் ஹேமாவுக்கு அறிவிக்கப்படவில்லை. இதன் மூலம் கொழும்பு மாவட்ட ஐ.தே.க பட்டியல் தயாரிப்பில் ஜனாதிபதி தோல்வியடைந்தார், என்றும் ரணிலும் கூரேயும் வெற்றியடைந்தனர் என்றும் கூறமுடியும்.

ஐ.தே.கவின் சகல வேட்புமனுக்களும் 8ஆம்திகதி வெள்ளிக்கிழமை தாக்கல் செய்யப்படவிருந்த போதிலும் வேட்பாளர் பட்டியலில் தம் பெயர் இல்லாததினால் ஹேமா வெறுப்படைந்து எதிரணியில் சேர்ந்து விடலாம் எனஅஞ்சி மனுதாக்கல் அன்று மேற்கொள்ளப்படவில்லை. தொடர்ந்து 11-ம் திகதி திங்கள் காலை 10மணிக்கு கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடும் சகல ஐ.தே.க வேட்பாளர்களையும் கொழும்பு மாவட்ட செயலகத்திற்கு வருகை தருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. அன்று காலை 9.30 மணிக்கே ஹேமா கொழும்பு செயலகத்திற்கு வந்து சேர்ந்துவிட்டார். அங்கிருந்த அவரின் ஆதரவாளர்கள் இவரை கண்டதும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். "அபே உதும் அம்மாடஜயவேவா" (எங்கள்உன்னத தாய்க்கு வெற்றி) என்ற கோஷம் வான்வரைஎழுந்தது ஹேமாவும் கைகளை அசைத்தபடி செயலகத்திற்குள் சென்றார்.

கொழும்பு மாவட்ட வேட்பாளர் பட்டியலை கையில் எடுத்துக் கொண்டு தலைமை வேட்பாளர் ரணிலும், சிறிசேன கூரேயும் கொழும்பு செயலகத்தினுள் நுழைந்தனர். பட்டியல் பார்வையிட கொடுக்கப்பட்டது. ஆவலுடன் பார்த்த ஹேமா, தனது பெயர் அதில் இடம் பெறாததைக் கண்டு கொண்டார். தலைமை வேட்பாளராக போடப்பட்டிருந்த ரணிலுடன் கடும் வாக்குவாதப்பட்டார். உச்ச நிலைக்கு சென்ற இந்த வாக்குவாதத்தில் சிறிசேன கூரே கலந்து கொள்ளாது அமைதி காத்தார். ஏனைய வேட்பாளர்கள் செய்வதறியாது குழம்பி நின்றனர்.

ரணில் -ஹேமா வாக்குவாதம் தணிக்கப்பட முடியாத நிலைக்கு சென்ற போது கட்சியின் பொதுச்செயலாளர் காமினி விஜயசேகரா மாவட்ட செயலகத்திற்கு அழைக்கப்பட்டார். பின்னர் ரணிலும் விஜயசேகராவும் ஹேமாவுடன் முப்பது நிமிட நேரமாக பேச்சு நடத்தினர். இறுதிவரை ஹேமா தனது பெயரை பட்டியலில் சேர்ப்பதற்காக போராடினார். ரணில் அதை நிராகரித்தார். கண்ணீர் மல்க செயலகத்தை விட்டு இறுதியில் முன்னாள் முதற்பெண்மணி வெளியேறினார். வெளியே வந்த இவரைப் பார்த்து அவரின் ஆதரவாளர்கள் நிலைமையை அறியாது மீண்டும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். இதனால் ஹேமாவின்கண்ணீர் மேலும் அதிகரித்தது.

-நிமலராஜன்

ஹேமாவிற்கு கிடைத்த இந்த ஏமாற்றம் எதிர்காலத்தில் அரசியலில் பிரேமதாசாவின் பெயர் கழுவப்பட்டுவிட வேண்டும் என்பதில் ஐ. தே. கவின் சில சக்திகள் குறியாக இருப்பதையே காட்டுவதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

ஐ. தே. க. வின் இந்த உட்கட்சி பூசல் கட்சியை எந்தளவுக் கொண்டு சென்றுவிடும் என்பதை எதிர்வரும் பொதுத்தேர்தல் முடிவுகள் நிச்சயம் தெளிவுபடுத்தும். இது சில சமயம் ஹேமாவுக்கு திருப்தி தரக்கூடியதாக இருக்கலாம்.


**முக்கிய அறிவித்தல்**

**வலி - கிழக்கு வர்த்தகர் சங்கம்**
**(கோப்பாய் வட்டப்பிரிவு)**

**விசேட பொதுக் கூட்டம்**

இடம்: அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி
காலம்: 15-07-1994 வெள்ளிக்கிழமை பி.ப. 4-00 மணி

இன்று கோப்பாய் வட்டப்பிரிவுக்குட்பட்ட அனைத்து வர்த்தகர்களுக்குமான விசேட பொதுக் கூட்டம் நடைபெறவிருப்பதால் அனைத்து வணிகர்களும் தங்கள் வணிக நிலையத்தை பிற்பகல் பூட்டி இக் கூட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து தவறாது பங்கு பற்றுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். இதில் தமிழீழ அரசியல் துறையினரும் கலந்து கருத்துரை வழங்குவார்கள்.

த. பரராசசிங்கம்
தலைவர்

அ. நாகேஸ்வரன்
செயலாளர்

(8797)

**திருமறைக் கலா மன்ற**
**சிறுவர் கலைக்கூட மாணவர்கள்**
**வழங்கும்**

**கலை நிகழ்ச்சிகள்**

காலம்: 16 - யூலை 1994
நேரம்: மாலை 6-45 மணி
இடம்: மன்ற அரங்கு
அனைவரையும் அழைக்கின்றோம்

238, பிரதானவீதி,
யாழ்ப்பாணம்.

திருமறைக் கலா மன்றம்
(சி-9909)

# "தொழிலாற்றும் பெண்களின் பிரச்சினைகள் உலகளவிலும் பரந்தே உள்ளன"

**பாங் கொக்கில் நடைபெற்ற ஆசிய -பசுபிக்நாடுகளின் ஆசிரியர்களுக்கானதொழிற்சங்க பெண்கள் கருத்தரங்கில் பங்குபற்றிய இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ச.ஜெயராசாவுடன் ஓர் சந்திப்பு**

**- ரகுராம்**

ஆசிய. பசுபிக் நாடுகளின் ஆசிரியர்களுக்கானதொழிற்சங்கப் பெண்கள் கருத்தரங்கு சென்ற மேமாதம் 26 தொடக்கம் 29ம் திகதி வரை நான்கு நாட்கள் பாங்கொக்கில் நடை பெற்றது. 29 நாடுகளைச் சேர்ந்த 52 பெண் ஆசிரியர்கள்இக்கருத்தரங்கில் பங்குபற்றினர். இலங்கையில் இருந்து ஐந்து பெண்கள் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர்இவர்களில்யாழ் இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ச. ஜெயராசாவும் ஒருவர்.

இக்கருத்தரங்கின் கருப்பொருள், கருப்பொருளிலான பிரச்சினைகளுக்கு தீர்வுகள், செயற்பாடு, தொழிலாற்றும் பெண்களின் உலகளாவிய நிலை பற்றித் தெரிந்து கொள்ள அவருடன் உரையாடினோம். அவர் அப்போது தெரிவித்தவற்றை இங்கே தருகிறோம்.

ஆசிய, பசுபிக் நாடுகளில் பெண்களின் நிலை பற்றி குறிப்பாக ஆராய்வதற்காக சர்வதேச தொழிலாளர் சம்மேளனம் (ILO) இக் கருத்தரங்கை ஒழுங்கு செய்திருந்தது. ஒவ்வொரு நாடுகளிலும் தொழிற்சங்க ரீதியாக பெண்களின் உரிமைகள், அவர்களுக்குள்ள கடமைகள் என்பன, முக்கிய ஆராய்வுத் தலைப்புகளாகின. இதைவிட, சாதாரணமாக பெண்களினது சமூக நிலை, பொருளாதார வாழ்வில் அவர்களது பங்கு பற்றியும் இக்கருத்தரங்கில் ஆராயப்பட்டது.

பரவலான முறையில், அபிப்பிராயங்களும் தெரிவிக்கப்பட்டன. தொழிற்சங்க ரீதியாக ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான ஏற்றத் தாழ்வுகள் எல்லா நாடுகளிலும் பிரச்சினைக்குரிய அம்சமாகவே கருதப்படுவதை இக்கருத்தரங்கில் உணர முடிந்தது. சில நாடுகளில் ஒரே வகையில் தொழிலாற்றும் ஆசிரியர்களில், ஆண்களுக்கு கூடிய வேதனமும், பெண்களுக்கு குறைந்த வேதனமும் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

தொழிலாற்றும் பெண்களுக்கான மேலதிக சுமை ஒரு பொதுப் பிரச்சினையாக காணப்பட்டது. தொழிற்தளத்தில், ஊழியம் செய்யும் ஒரு பெண், வீட்டிலும், குடும்ப நிர்வாகத்தை கொண்டு செல்லும் வகையில் அவளது சுமைகள் பற்றியும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன. ஒரு பெண்ணின் உள ரீதியான பாதிப்புக்களை சமூகம் காணாமல் விடுவது பற்றியும் அங்கலாய்க்கப்பட்டது.

இச் சிக்கல்கள், ஒரு பெண்ணினது திறமைகளை வெளிப்படுத்த தடையாயிருக்கும் என்பதை கருத்தரங்கில் பங்குபற்றியோர் ஏற்றுக் கொண்டனர்.

பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் மேலதிக பொருளாதார தேவைக்காக பெண்கள் பலவந்தமாக விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். வேறுசில நாடுகளில், கல்வியறிவற்ற நிலையில் சட்டரீதியான உதவிகளைப் பற்றி அறிய முடியாதவர்களாகவும் பெண்கள் இருப்பதும் தெரியவந்தது.

எமது பிரதேசப் பெண்களின் நிலையைப் பற்றி பெரிதாக சிலாகிக்கப்பட்டது. 98% மான பிரதேசப் பெண்கள் ஏனைய நாட்டுப் பெண்களை விட சம உரிமையைப் பெற்று வாழ்வதாக வட இந்தியாவிலிருந்து வந்திருந்த ஆசிரியை ஒருவர் கூறினார். இந்தியாவில் பெருகிவரும் சீதனக் கொடுமையும் அந்நாட்டின் பிரதிநிதிகளால் எடுத்துக் கூறப்பட்டது. இந்நிலையில் எமது சமூகத்தில், சீதனத்திற்கெதிரான போராட்டம் தவிர்க்க முடியாமல் நினைவில் வந்தது.

பொருளாதாரத் தடை, மின்சாரமில்லை, எனப் பல பிரச்சினைகளின் மத்தியிலும் எமது பெண்களின் தொழிற்திறன் பாதிக்கப்படுவதை அனுதாபத்துடன் பலர் கேட்டறிந்தனர். யாழ்ப்பாணத்திற்கு தான் ஒருமுறை வந்துள்ளதாகவும், அப்போதிருந்த நிலைக்கும், இன்றைய நிலைக்கும் வேறுபாடுகளை வியப்புடன் கேட்டறிந்தார், ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த திருமதி ஸ்ரீபன். துப்பாக்கி ஏந்துவதிலும் தமிழ்ப் பெண்கள் சமத்துவமுடையவர்களே என கல்கத்தாவிலிருந்து வந்த ஆசிரியரொருவர் சிரித்தவாறே கூறினார்.

உண்மையில், நான் சந்தித்த வேற்று நாட்டுப் பிரதிநிதிகளின் தகவல்களை வைத்துப் பார்க்கும்போ ; எமது பெண்களின் இன்றைய நிலை உயர்ந்து காணப்படுவதை மனதார உணர முடிந்தது.

கருத்தரங்கின் ஆலோசனைகள், சர்வதேச கல்வி நிறுவனத்திடம் மேலதிக செயற்பாடுகளுக்காக சமர்ப்பிக்கப்படவிருக்கின்றன. ஒவ்வொரு பிரதேசத்திலும் செயற்பாடுகளை முன்னெடுக்க தொழிற்சங்கங்களின் உதவிகளைப் பெறுமாறும் கோரப்பட்டுள்ளது.

பொருளாதார ரீதியான நெருக்குதல்களை மாத்திரம் மையமாகக் கொள்ளாது, பெண்கள் சம்பந்தப்பட்ட பல விடயங்களும் கலந்தாலோசிக்கப்பட்டது. பிரச்சினைகள் எழுந்திருந்த கோணங்கள் ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு விதமாகக் காணப்பட்டது. மேற்கத்தைய நாடுகளோடு போட்டி போடும் ஜப்பானிலும் கூட பெண்களுக்கெதிரான ஆணாதிக்கம் பல விடயங்களில் இருந்ததை வியப்புடன் ஏற்றுக்கொள்ள வேண்டி இருந்தது.

கருத்தரங்கில் ஆராயப்பட்ட விடயங்கள், அதற்குரிய தீர்வுகளை நடைமுறையில் செயற்படுத்தும் போதுதான் கருத்தரங்கின் வெற்றி புலனாகும் எனக் கூறி உரையாடலை முடித்துக் கொண்டார் திருமதி ச ஜெயராசா.

# காலில் வெறும் செருப்புடன் மட்டும் பனிபடர்ந்த எல்லைகளை தாண்டும் தமிழ் அகதிகள்

ஒரு நடுத்தர வயது மனிதன் கையில் ஒரு பிளாஸ்ரிக் பையுடன் ஹங்கேரி எல்லைக்கருகாமையில் ஆஸ்திரிய வீதி ஓரமாக நின்று கொண்டிருக்கின்றான்.

''சட்டவிரோதமாக எல்லையில் ஒருவர் புகுந்திருக்கிறார்.'' ஆஸ்திரிய இராணுவ அதிகாரி ஒருவர் கூறுகிறார்.

''அவர்கள் பிளாஸ்ரிக் பைகளுடன் புதர், சகதியூடு வந்ததில் அழுக்காகவும் இருப்பார்கள்.'' இளம் சிப்பாய் ஒருவரைச் சென்று அந்த மனிதனைச் சோதனையிடும்படி உத்தரவிடுகிறார் அந்த அதிகாரி.

கிழக்கு ஐரோப்பா திறந்துவிடப்பட்டதிலிருந்து எல்லை கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதற்குப் பதிலாக ஆஸ்திரிய எல்லைப் பொலிசார் தமது கண்காணிப்பை தீவிரப்படுத்தியுள்ளனர். இவர்களின் இந்த முழுநேர விழிப்பு சட்டவிரோதமாக நுழைய முயலும் மத்திய ஐரோப்பிய தனிநபர்களைப் பிடிப்பதோடு, அபிவிருத்தி அடையும் நாடுகளிலிருந்து சட்ட விரோதக் குடியேற்றக்காரர்களைக் கொண்டு வரும் தொழில்ரீதியான கடத்தல்காரர்களுக்கும் எதிரானதாகும்,

கடந்த இரண்டு ஆண்டுகளில் 60 நாடுகளிலிருந்து சுமார் 25 ஆயிரம் பேர் உரிய தஸ்தாவேஜுக்களின்றி எல்லையைக் கடக்க முற்படுகையில் இங்கு பிடிபட்டிருக்கிறார்கள்.

''பெரும்பான்மையானவர்கள் கிழக்கு ஐரோப்பாவில் இருந்து வருபவர்கள்'' -அந்த அதிகாரி சொல்கிறார் பட்டியலில் முதலிடம் வகிப்பது றோமேனியா. 9 ஆயிரம்பேர் பிடிபட்டிருக்கிறார்கள்.

ஆனால் ஆபிரிக்கா, பங்களாதேஷ், இந்தியா, கம்போடியா ஆகிய நாடுகளிலிருந்தும் பெருமளவில் வருகிறார்கள் என்றும் மிகப்பெரியதான ஒரு தனித்த குழு 70 பேர் அடங்கிய இலங்கைத் தமிழர்கள்.

## ஐரோப்பிய நாடுகளின் எல்லைக் காவல் தீவிரமாகிறது

''அண்மையில் இலங்கையில் இருந்து சின்னக் குழந்தைகளுடன் ஒரு குடும்பம் கால்களில் வெறும் செருப்புகளுடன் மாத்திரம் பனியில் எல்லையைத் தாண்டி வந்தது. அவர்களை நாம் பிடிக்கும்போது வழக்கமாக 48 மணித்தியாலங்களுள் அவர்களை நாம் திருப்பி அனுப்புவோம் ஆனால் ஆஸ்திரியாவில் எவரையாவது அவர்கள் தெரிந்திருந்தால் திருப்பி அனுப்புவது 6 மாதங்கள் வரை தாமதிக்கலாம.''

நாட்டிற்குள் புதிதாக தனித்து வருபவர்கள் அனேகமாக எல்லைகளை அண்மித்த பஸ் தரிப்புகளில் பிடிபடுகிறார்கள். நகருக்குள் சென்று விட்டால் அவ்வளவாக எவரும் இவர்களை கவனிக்க மாட்டார்கள் என்பதால் அங்கு செல்வதற்காக இவர்கள் பஸ் தரிப்புகளில் காத்து நிற்கிறார்கள்.

கடத்தற்காரர்களால் டிரக்குகளில், ஏன்- சரக்கு கொள்கலன்களில் கூட கொண்டுவரப்படுபவர்கள் பெருந்தொகைப் பணத்தை- ஆளுக்கு சுமார் 2 ஆயிரம் டொலர் என்று கூறப்படுகிறது இந்தச் சோதனை மிகும் பயணத்துக்கு கொடுக்கிறார்கள். அவர்களும் கூட பல தடவைகளில் பிடிபட்டு சொந்த நாட்டுக்கு திருப்பி அனுப்பப்படுகிறார்கள் பலர் தமது பணத்தை இழக்கிறார்கள். மூடப்பட்ட கொள்கலன்களில் அடைக்கப்பட்டு மூர்ச்சையாகி பலர் இறக்கிறார்கள்.

எல்லைக் கண்காணிப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து, 30 ஆயிரம் பேர் வரை அவர்களது நாடுகளுக்கு திருப்பியனுப்பப்பட்டிருக்கிறார்கள். கடந்த ஆண்டில் உரிய தஸ்தாவேஜுகளின்றி 4 ஆயிரம் பேர் ஆஸ்திரியாவுள் நுழைய முயன்றிருக்கிறார்கள். இவர்களில் அதிகமானவர்கள் றோமேனியர்களும் அல்பேனியர்களுமே. அபிவிருத்தியுறும் நாடுகளைச் சேர்ந்தவர்களும் பலர் உளர்.

துருக்கியரும், ஈரானியரும், சீனர்களுமே பெரும் கடத்தல்காரர்கள் என்று ஆஸ்திரிய அதிகாரிகள் தெரிவிக்கின்றார்கள். கடந்த ஆண்டில் தமது 'மனித சரக்கு' களிடமிருந்து 5 லட்சம் டொலருக்கு மேலான பணத்தை பெற்றிருந்ததாகக் கூறப்படும் சீன-வியட்நாமியரின் கடத்தல் நடவடிக்கையொன்றை பொலிசார் முறியடித்தனர்.

சீன கடத்தல்காரர்கள் ஆசியாவிலிருந்து மக்களைபழைய சோவியத்யூனியனைக் கடநது செக். சுலோவாக்கியா குடியரசூடாக ஜேர்மனி. பிரான்ஸ், ஹொலண்ட், ஆஸ்திரியா ஆகிய நாடுகளுக்கு கொண்டு செல்கிறார்கள்.

''இது ஒரு சர்வதேசக்கடத்தல் குழு''என்று ஆஸ்திரிய அதிகாரி ஒருவர் இந்த 'வர்த்தகம்' பற்றிக் குறிப்பிட்டார். இவர்கள் சீன உணவகங்களுடனும் தொடர்புகளைக் கொண்டிருக்கிறார்கள். அண்மையில் அப்படியோர் உணவகத்தில் சட்டவிரோதமாக வந்த 50 சீனர்களை நாம் பிடித்தோம்.

இந்த நாடுகளின் பொருளாதார நிலைமைகளில் மாற்றம் ஏற்பட்டாலொழிய நிலைமை மாறப்போவதில்லை. இப்படிக் கூறுகிறார் ஓர் இராணுவ அதிகாரி.

உள்ளே வருவதில் வெற்றி காண்போரின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு மாத்திரம் நாம் முயற்சிக்கலாம். உண்மையாகவே தஞ்சம் கோருவோர்பற்றி தீர்மானிப்பதற்காகவோர் ஐரோப்பிய சாசனம் நமக்கு தேவை. ஆனால் அது ஆஸ்திரியாவின் பிரச்சினை அல்ல. ஆஸ்திரியாவுக்கு வருபவர்கள் எதனை எதிர்பார்க்க வேண்டும் என்பது அவர்களுக்கு தெரியும்.

எல்லைகளை நன்கு தெரிந்த முன்னைய யூகோஸ்லாவிய, றோமேனிய குழுக்களும் இதில் ஈடுபட்டிருக்கின்றன. ஆஸ்திரியா இதுவரை 73 ஆயிரம்பொஸ்னிய அகதிகளை ஏற்றிருக்கிறது.

கிழக்கில் சுமார் 1200 கி. மீட்டர் நீளமான எல்லையை நாம் கொண்டிருக்கிறோம் செக்குடியரசு, சுலோவாக்கியா, ஹங்கேரி, சுலோவேனியா என்பன ஐரோப்பிய சமூகத்தில் உறுப்பினராக இல்லாதவரைக்கும் நாம் கூடுதல் விழிப்பாக இருக்க நேர்கிறது. ஆஸ்திரிய இராணுவ அதிகாரி கூறுகிறார்.

நாமும் கூட இன்னமும் ஐரோப்பிய சமூக உறுப்பினராக இல்லாவிட்டாலும் நாம் இதைச் செய்யவே வேண்டும். ஏனெனில் ஆஸ்திரியாவூடாக கடந்து விட்டால் பினனர் சுவீடன்வரை எங்குமே அவர்கள் எவ்வித கட்டுப்பாடுமின்றி சென்றுவிட முடியும்.

அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஆணையாளர் அலுவலக அதிகாரி ' ஒரு நாட்டின் கொள்கைகளில் ஐ. நா. தலையிடாது' என்கிறார். அத்துடன் ஒருவர் தஞ்சம் கோரும்போது அதில் ஐ. நா ஈடுபாடெதனையும் கொண்டிருக்கவில்லை.

ஆஸ்திரிய சட்டங்களைப் பொறுத்தவரை நாட்டுக்குள் சட்டவிரோதமாக நுழையும் எவரும் சட்ட ரீதியாக தங்குவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

(8ஆம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம் நல்லூர் ... நூலகம்,

# வைத்தியகலசம்

## ஓர் மதிப்பீடு

வைத்திய கலசம் என்ற இம் மருத்துவ நூலின் ''அறிமுக விழா'' 21-5-94 அன்று எழுத்தாளர் ஒன்றியத்தில் கலாநிதி நா. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

இம்மருத்துவ நூல் வைத்திய கலாநிதி எம். கே. முருகானந்தத்தினால் பெப்ருவரி 87 முதல் ஜூலை 89 வரையான காலப்பகுதியில் வாரம் தோறும் முரசொலி பத்திரிகையில் தொடராக எழுதப்பட்டு வந்த வைத்திய கலசத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பாகும்.

இந்நூல் 115 பக்கங்களுடன் 40 பல்வேறு விதமான தலைப்புக்களை தாங்கி வந்துள்ளது. இங்கு வைத்தியர் சாதாரண மக்களுக்கு இலகுவில் புரியக்கூடிய விதத்தில் நடைமுறைத் தமிழில் எழுதியுள்ளார். இவர் ஒரு வைத்தியர் மட்டுமல்ல, சிறந்த கலை, இலக்கிய படைப்பாளியும் கூட. இதனை அவரின் எழுத்து நடைமுறையிலும் தலைப்புக்கள் கொடுக்கப்பட்டிருக்சம் அழகிலும் சுலபமாக புரியக்கூடியதாகவுள்ளது. இவர் இதற்கு முதல் 'எயிட்ஸ்'', ''பாலியல் நோய்கள்,'' ''தாயாகப்போகும் உங்களுக்கு'' போன்ற மருத்துவ நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

இந்நூலில் ஆசிரியர் இன்றைய காலகட்டத்தில் மக்கள் எதிர்கொள்ளும் மருத்துவச் சிக்கல்களை தெளிவு படுத்துவதுடன் நோய்க்குரிய சிகிச்சை மட்டுமல்ல நோயைக் கட்டுப்படுத்துவதற்கு கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள், உணவு முறைகள், அவற்றுக்கான ஆலோசனைகள் போன்றவற்றையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இங்கு ஒவ்வொரு அத்தியாயத்திற்கும் கொடுக்கப்பட்டுள்ள தலைப்பு கவர்ச்சிகரமாகவுள்ளது. உதாரணமாக ''கடித்தது விசர் நாயானாலும் கலங்காதீர்கள்'' என்ற தலைப்பைப் பார்த்ததும் அதற்குள் என்ன எழுதியுள்ளது என்று உடனடியாக வாசிக்கத் தூண்டும் ஓர் உணர்வை ஏற்படுத்துகின்றது.

இங்கு நோய்களைப் பற்றி விரிவாக ஆராய்ந்து வாசிக்கும் சாதாரண மக்களுக்கு குழப்பம், வெறுப்பு போன்றவற்றை ஏற்படுத்தாமல் கூடுதலாக ஆலோசனைகளும் நோய்த் தடுப்பு வழி முறைகளும் எடுத்து சொல்லியிருப்பது வரவேற்கத்தக்கது.

இந்நூலில் இரத்த அழுத்தம் (பிறசர்), நீரிழிவு, தொய்வு போன்ற நோய்களுக்கான ஆலோசனைகள், உணவு வகைகள் போன்றவற்றையும் மலேரியா, நெருப்புக் காய்ச்சல், செங்கண்மாரி டெங்குக்காய்ச்சல், கூகைக்கட்டு போன்ற தொற்று நோய்களினால் ஏற்படும் ஆபத்துக்கள் பற்றியும் அவற்றில் இருந்து எவ்வாறு எம்மைக் காப்பாற்றலாம் என்பது பற்றியும் தெளிவாக எழுதியுள்ளார். இவற்றை விட ஏற்புத்தடை ஊசியின் முக்கியத்துவத்தை ''ஏற்புவலி தடை ஊசியை ஒழுங்காக போடுங்கள்'' என்ற தலைப்பின் கீழும் ஆண்களில் ஏற்படும் கேனியா, விதைப்பை நீர் வீக்கம் போன்றவற்றினால் அவர்களிற்கு ஏற்படும் சந்தேகங்கள் கவலைகள் போன்றவற்றிற்கு தெளிவான ஆலோசனைகளும் எழுதப்பட்டுள்ளது. மேலும் பெண்களில் ஏற்படும் மார்புப் புற்று நோயை ஆரம்பத்தில் கண்டறிவதற்கான வழிமுறைகளையும் மாதவிலக்கின் போது வயிற்றுக்குத்து, கருப்பை இறக்கம் போன்றவற்றுக்கான ஆலோசனைகளையும் விளக்கமாக கூறியுள்ளார்

அத்துடன் இன்றைய காலத்தின் தேவையை மனதில் பதித்து இரத்த தானத்தின் மகிமையைப்பற்றி ''இரத்த தானம் செய்து ஓர் உயிரைக் காப்பாற்றுக'' என்ற தலைப்பின் கீழ் ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளார். இதனால் மக்கள் மத்தியில் இரத்த தானம் பற்றிய தவறான கருத்துகளை நீக்கியுள்ளார். தலையிடியானது மக்களின் அன்றாட வாழ்வில் பின்னிப்பிணைந்த ஒரு பொதுவான பிரச்சினையாக இருந்தாலும் சில வேளைகளில் ஆபத்தான ஒரு நோயின் அறிகுறியாக இருக்கலாம் என்பதை கருத்தில் கொண்டு ''தலையிடியை அலட்சியம் செய்யாதீர்கள்'' என்ற தலைப்பின் கீழ் ஓர் எச்சரிக்கையும் விடுத்துள்ளார். இவற்றுடன் எடுத்தவுடனேயேசகல நோய்களிற்கும் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவது அவசியம் அற்றது என்பதைக் காட்டி ''சின்னம்மை அபாயமற்றது'' என்ற தலைப்பின் கீழ் கொப்பளிப்பான் பற்றியும் வயிற்றோட்டத்திற்கு வீட்டில் கடைப்பிடிக்க வேண்டிய சிகிச்சை முறைகள் பற்றியும் எடுத்துரைத்துள்ளார்.

இங்கு நோய்கள், மருத்துவ ஆலோசனைகள் நோய்களுக்கான உணவு முறைகள், உடல் அப்பியாசங்கள் போன்றவற்றை மட்டுமல்ல, இன்றும் எம்மில் பலர் கடைப்பிடிக்கும் சில மூடப் பழக்க வழக்கங்கள், தவறான நம்பிக்கைகள், அதனால் ஏற்படும் ஆபத்துக்கள் போன்றவற்றையும் விளக்கியுள்ளார்.

உதாரணமாக;-

தலைமயிர் குடலில் சிக்கியதால் குழந்தைக்கு வயிற்றோட்டம் என்று 'தொங்கலுக்குப்'' பார்ப்பதும் எனது பால் பிள்ளைக்கு ஒத்துக்கொள்ளவில்லை அது தான் வயிற்றோட்டம் என்று பால் கொடுப்பதை நிறுத்துவதும் ......... இப்படி பற்பலவற்றை சுட்டிக் காட்டியுள்ளார். இதற்கு மேலாக இந்நூலில் இடைக்கிடை எழுதப்பட்டுள்ள மூதறிஞர்களின் வாய்மொழி வாசகங்கள் இந்நூலுக்கு மேலும் மெருகூட்டுகின்றன.

உதாரணமாக;-

மருத்துவ சேவையில் சிகிச்சையுடன் அன்பும் பரிவும் சேர்ந்து நிற்பதன் யதார்த்தத்தை உணர்ந்த இவ்வைத்தியர் அப்பரிவின் உன்னத படைப்பாகிய தாய்மையை
அம்மா
அவளின் மார்பில் தான் மனிதம் போசிக்கப்பட்டது. அவளது மடியில் தான் மனித நாகரீகங்கள் தொட்டிலிடப்பட்டது.

என்ற வாசகத்தின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். இவற்றுடன் மேலும் சில மருத்துவத் தகவல்களை கவிஞர்களின் கவிதையூடாக வெளிக்காட்டி உள்ளார்.

உதாரணமாக:-

உடலுக்கு ஆற்றல் அழிப்பது
கவனிப்பு திறனை பெருக்குவது
உடல் எடையை குறைக்க துணை செய்வது
தவிர்க்கப்படக் கூடாததும் கூட
அதுவென்ன?
அது தான்.........
ஒரு நல்ல காலை உணவு

என்ற டாக்டர் ண்ஸ்டீல் என்பவரது வாசகத்தின் மூலம் ஒருவருக்கு காலை உணவு எவ்வளவு முக்கியம் என்பதை எடுத்துரைத்துள்ளார்.

இந்நூலில் 40 தலைப்புக்களின் கீழ் பல்வேறு வகையான நோய்களைப்பற்றி ஆராய்ந்திருந்தாலும் 'கொலறா' சிறுபிள்ளைகளில் அதிகமாக ஏற்படும் நோய் தாய்பாலூட்டலின் அவசியம் உப உணவூட்டலின் முக்கியத்துவம் போன்ற விடயங்களையும் சேர்த்து எழுதியிருந்தல் இது மக்கு(ரு)ு மேலும் பிரயோசனமானதகவல்களைக் கொடுத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

எல்லாவற்றிற்கும் மேலாக இவ் வைத்திய நூலுக்கு போடப்பட்டுள்ள முன் அட்டைப்படம், பின் அட்டையிலுள்ள பாரதிதாசனின் கவிதை போன்றனவும் ஒரு வித்தியாசமான எடுப்பான தோற்றத்தைக் கொடுக்கின்றது என்றால் அது மிகையாகாது. இவ் வட்டைப்படத்தை பார்த்த உடனேயே ஓர் சுவாரசியமான கதைப் புத்தகத்தை வாசிக்க தூண்டுவது போல் ஓர் உணர்வை ஏற்படுத்துகின்றது.

இன்றைய போர்ச் சூழலில் மருத்துவ வசதிகள் குறைந்த காலத்தில் மக்கள் நோய்களில் இருந்து தம்மை ஆரம்பத்திலேயே காப்பாற்றி நோயற்ற ஆரோக்கிய வாழ்வு வாழ்வதற்கு அனைவருக்கும் மருத்துவ அறிவு அவசியம். ஆனால் தற்கால உலகில் அனேக மருத்துவ நூல்கள் ஆங்கில மொழியில் இருப்பதினால் மக்கள் ஆர்வம் இருந்தும் படிக்க முடியாமல் இருக்கின்றனர் இவ்வாறான இக்கட்டான சூழ்நிலையில் தான் இவ் வைத்திய நூல் நடைமுறைத் தமிழில் சகல மக்களுக்கும் புரியத்தக்க விதத்தில் எழுதப்பட்டுள்ளது. இவ்வரிய சந்தர்ப்பத்தை சகல மக்களும் பயன்படுத்தி ஒவ்வொரு குடும்பத்தில் உள்ள அனைவரும் தவறாது வாசித்து நோயின் பிடியினால் ஏற்படும் அநாவசிய உயிரிழப்பில் இருந்து தங்களை காப்பாற்றிக் கொள்ள வேண்டும். தொடர்ந்து இவ்வாறான மருத்துவ நூல்கள் எமது மொழியில் வெளிவந்து எமது மக்களின்மருத்துவ அறிவினை உயர்த்த வேண்டும்.

- வைத்திய கலாநிதி
பத்மலோஜினி.

# பாம்புக் கடிக்கு மின்சாரம் மூலம் அதிர்ச்சி வைத்தியம்

பின் தங்கிய கிராமப்புறங்களில் பாம்புக் கடிக்கு இலக்காகுபவர்கள் உடனடியாக சிகிச்சை பெறும் வாய்ப்பு வெகு குறைவாகவே உள்ளது. குறைந்த விசை மின்சாரத்தைப் பயன்படுத்தி அதிர்ச்சி கொடுப்பது தகுந்த மாற்று வைத்தியம் எனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

சிறு மோட்டர்களைப் பயன்படுத்தி ஐந்துக்கும் பத்துக்கும் இடைப்பட்ட நிமிட நேரத்தில் நான்கு அல்லது ஐந்து தடவைகளில் மின்சார அதிர்வைக் கொடுப்பது மூலம் பாம்புக் கடியால் ஏற்படும் நஞ்சு பரவுவது கட்டுபபடுத்தப்படும் என்பது இப்போது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இலண்டனிலும், ஐக்கிய அமெரிக்காவிலும், ஈக்குவடோரிலும் இருக்கும் சுகாதார மற்றும் வெப்பவலய ஆய்வாளர் பாம்புக் கடிக்கு இலக்கான 34 பேருக்கு இந்த வகையில் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. சிகிச்சை அளிக்கப்பட்ட 10-15 நிமிடங்களின் பின் வலி எதுவும் இருக்கவில்லை. இவர்களில் எவரேனும் மரணிக்கவில்லை. சிகிச்சையின் பின்னர் ஒரு மணி நேரத்தின் பின் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டனர். பாம்புக்கடியின் பின் அல்லது சிகிசசையின் பின்னர் இவர்களுக்கு எந்தத் தழும்பும் இருக்கவில்லை. இந்த அதிர்ச்சி வைத்தியத்தை நிராகரித்த எழுவர் வழமையாக ஏற்படும் உபாதைகளை அனுபவித்ததோடு இருவருக்கு உயிரைக் காக்க கடியுண்ட பகுதிகளை நீக்கி விட வேண்டிய நிலை ஏற்பட்டது.

பாம்பினால் கடியுண்டபின்னர் இரு மணித்தியாலங்களுக்கு எவ்வித மருத்துவ உதவியும் பெறாத இருவருக்கு இச்சிகிச்சை அளிக்கப்பட்டது அப்போது அவர்களின் காயப்பட்ட உறுப்புக்கள் உடனடி இரத்தப் பெருக்கும் கடும் நோவும், வீக்கமும் காணப்பட்டது. ஏழு முறை மின்சார சிகிச்சை அளிக்கப்பட்டு முப்பது நிமிடங்களின் பின்னர் வலி நிவாரணம் ஏற்படத் தொடங்கியது. பன்னிரண்டு மணித்தியாலங்களின் பின்னர் வீக்கங்கள் குறையத் தொடங்கினதுடன் இரத்தக் கசிவும் நின்று போயிருந்தது. மூன்று நாட்களின் பின்னர் முழுமையாக மாறியிருந்தன.

இந்த சிகிச்சை முறை கறுத்தப் புடையன் மற்றும் எறும்புக் கடிகளுக்கும் கூட வெற்றிகரமான பயனைத் தந்துள்ளது. குறிப்பிடத்தக்கது. இந்தச் சிகிச்சையின் உடற்கூறு சார்ந்த அடிப்படை பறறி இன்னும் தெரியவரவில்லை எனினும் கடி அதிர்ச்சியின் தாக்கம் அல்லது கடியின் நஞ்சின் செயற்பாட்டில் இந்த சிகிச்சை முறை ஏற்படுத்தும் தாக்கம் குறித்தும் தெளிவுபடுத்தப் படவில்லை. நஞ்சு சிறிய அரை வாழ்வைக் கொண்டதாக தெரிகிறது. அதிர்ச்சி சிகிச்சையினால் இரத்தோட்டக் கலங்கள் தடைப்பட்டு கடியுண்ட இடத்திலேயே நஞ்சு பரவாமல் நிறுத்தப்படவும் அதனால் நச்சுத் தன்மை தொழிற்படாமல் இருக்கலாம்.

இந்த நடைமுறை எப்படியிருந்த போதும் இந்தச் சிகிச்சை தொழிற்பாடு பயனளிக்கக் கூடியதும் சாத்தியப்பாடானதும் ஆகும் என்பதே கவனிக்கத்தக்கது.

நன்றி: ''Science Age''

# இப்போதே என் தேசம் இத்துணை அழகென்றால்

அகலக் குடை விரித்த
அந்த ஆலமர நிழலிலே
அமைதியான தாமரைத் தடாகம்

கண்ணுக்கெட்டிய இடமெல்லாம்
கரும்பச்சை விரித்தாற்போல்
காற்றில் அசைந்தாடும்
நெல் மணிக் கதிர்கள் - தூரே
சுற்றிச் சூழ்ந்த படி
காவலரண்களாய் பனை மரங்கள்.

சின்னஞ் சிறிதுமாய்
சற்றுப் பெரிதுமாய்
நீந்தி விளையாடும் மீனினக் கூட்டம்
நீரினுள் அமிழ்ந்த
கால்களைக் கடிக்கையில்
எழுந்திட்ட கூச்சத்துள்ளலும்
காலசைக்காது காத்திருக்கின்றேன்
அவற்றினை ரசிப்பதற்காய்

சற்றுப் பொறுத்திருக்க
பசிய மென்பரப்பினை - தொட்டுப்
படரும் வான்பரப்பின்
தொடு வான எல்லையிலே
செக்கச் செவேலென்ற
செங்கோளமொன்று - அமிழ்ந்த படி

ஓ! எனது தேசம் தான்
எத்தனை அழகானது
மயக்கும் மாலைப் பொழுதில்
மனது மயங்கி நிற்க
மெய் மறந்த நிலையில் - என்
தாய் மண்ணை ரசிக்கையில்
தோழி சொன்னாள்
''இக்கரையையும் பாரேன்'' என்று

கலசம் இழந்த படி
தலை சாய்ந்த கோபுரமும்
வானமே கூரையாகி
பண்டைய கோவில்
தார்மீக அரசின்
தர்மகைங்கர்யத்தின்
அழியாச் சின்னமாய்
அழிந்து கிடக்கிறது.

சமீபத்தைய படையெடுப்பின்
சரித்திரச் சான்றாம் - இது

புதிய காட்சி
புலர்கிறது - என்
மனக்கண் முன்னே

பரந்த வயற் பரப்பில்
பதுங்க இடமின்றி
பொழியும் குண்டுகளுக்கும்
உறுமும் ட்ரக்குகளுக்கும் - தம்
உதிரத்தால் விடை கூறி
படையெடுப்பை முறியடித்த
பாதங்கள் தெரிகின்றன.

இப்போது புரிந்தது
இத்துணை அழிவின் பின்னும்
என் தேசம் எப்படி
அழகிழந்து போகாமல்
நிற்பதன் ரகசியத்தை

இப்போதே என் தேசம்
இத்துணை அழகென்றால்
விடியலின் பின் - எப்படி
கவர்ச்சி காட்டும்?
இவ் எண்ணம் தலை தூக்க
எழுந்தே நிற்கின்றேன்
என் தேசத்தின் விடிவுப்
பாதையில் பயணிப்பதற்காய்.

- சொருபா

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

### அமரர் சீனியர் சுந்தரலிங்கம்

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு 15-6-94 அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தின் இறுதிச் சடங்கில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள்.

சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்கள் மற்றும் உற்றார், உறவினர் அனைவரையும் 15-7-94 அன்று எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்,

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

மனைவி, பிள்ளைகள்
(8780)

## லங்கா சீமெந்து கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)
காங்கேசன்துறை லங்கா சீமெந்து தொழிற்சாலை தொழிலாளர்க்கான வைகாசி ஆனிமாத கொடுப்பனவுகள் 16-ம் திகதி காலை 8.30 முதல் மதியம் 1.00 மணி வரை யாழ்ப்பாணம் வர்த்தக வங்கியில் வைத்து வழங்கப் படவுள்ளதாக முகாமையாளர் அறிவித்துள்ளார்.

## இன்று

கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலய
வளர்ச்சி நிதிக்காக

## மாபெரும் நாடக விழா

மகாவித்தியாலய ஆரம்ப பிரிவு மாணவர்கள் வழங்கும்
★ அனுபவம் புதுமை

மகா வித்தியாலய உயர்தர மாணவர்கள் வழங்கும்
★ வீரபாண்டிய கட்ட பொம்மன்


சங்கானை "மனோலயா" வழங்கும்
★ காத்தவராயன் (நாட்டுக் கூத்து)

இடம்: மகா வித்தியாலய அரங்கு
காலம்: 15-07-1994 வெள்ளிக்கிழமை
மாலை 6-00 மணி
அன்பளிப்பு:
20 ரூபா மட்டுமே மாணவர்களுக்கு 10ரூபா

விளம்பர அன்பளிப்பு:

ஸ்ரீ விக்கினேஸ்வரா களஞ்சியம்
148, கண்டி வீதி,
சாவகச்சேரி.
(சி-9922)

## 5-ம்ஆண்டு நினைவஞ்சலி



மேஜர் ஞானவேல்
(சிற்றம்பலம் தயானந்தராசா)
இடைக்குறிச்சி, வரணி

பிறப்பு: 11-03-1966
வீரச்சாவு: 15-07-1989

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
- குடும்பத்தினர்
(8804)

### காலில்

ஆஸ்திரிய சட்டத்தில் ஓட்டைகள் இருந்தாலும் பொதுவில் அது தெளிவானதாகவே இருப்பதாக ஐ. நா. அதிகாரி கூறுகிறார். 'பிடிபடின் உடனடியாகவே வீட்டிற்குத் திரும்பிச் செல்வதற்கும் சில வேளைகளில் மேலும் வறுமையை எதிர்கொள்ளவும் தயாராக இருங்கள். இது தான் சட்ட விரோதக் குடிவரவினருக்கு ஆஸ்திரியாவின் செய்தி - இராணுவ அதிகாரி கூறுகிறார்,

-நன்றி ''நாழிகை''

ஜோ. எகட்டனின்
## ஜெசித்தாரா
வழங்கும்


காவிச்செல்லும் உணவுப் பொட்டலங்கள் நண்பகல் 11.45 மணிமுதல் பிற்பகல் 3.45 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

விலை ரூ 27/50
மரக்கறி, இறைச்சி,
மீன்
எதுவானாலும்

ஜெசித்தாரா,
சுண்டுக்குளி மகளிர்
கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி.
(சி/99 20)

15. 07. 1991 இல் நடந்த
ஆட்லறி ஷெல் தாக்குதலினால் கருகிப் போன
எம் மவர்களின்

## மூன்றாண்டுநினைவஞ்சலி



| | |
|---|---|
| அமரர் | தோற்றம் |
| கந்தசாமி பேரம்பலம் (நெல்லை க. பேரன்) | 18. 12. 1946 |
| திருமதி பே. உமாதேவி | 15. 06. 1956 |
| செல்வன் பே. உமாசங்கர் | 02. 10. 1976 |
| செல்வி பே. ஷர்மிளா | 13. 08. 1984 |

மறைவு:- 15. 07. 1991

ஓர் இரவில் ஒரு பொழுதில் கருகிய எம்மவர்களுக்காக இன்று (15- 07- 1994) வெள்ளிக்கிழமை அவரது குடும்பத்தினரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.


மூன்றாண்டு சென்றதண்ணா
ஓரிரவில் உங்கள் குடும்பம் கருகியதேன்?
எமை ஈன்ற பெற்றோரிலும் மேலாய்
சுமை தாங்கி செழிப்புற வைத்தீரண்ணா
சீறி வந்த ஷெல்லுக்கும் கண்ணில்லை
கதறும் எங்கள் குரலுக்கும் முடிவில்லை
நெல்லையில் க. பேரன் வாழ்ந்ததே போது மென்று
தில்லையில் ஆடும் நடராஜன் தன்
எல்லையில் திருவடி இணைத்து மூன்றாண்டு
எல்லையில் ஆழ்ந்து துயர் அடைகின்றோம்
உங்கள் எழுத்துத் தான் மிஞ்சியதண்ணா
செல்வங்கள் மனைவி தன்னைச்
சேர்த்துமே சென்றீரண்ணா
சொல்லுங்கள் மீண்டும் இங்கே வருவதென்றோ?

பெற்றோர், சகோதரர்


முருகன் கோயிலடி,
நெல்லியடி.
(சி- 9917)

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி

15- 7- 83 அன்று மீசாலையில் சிறிலங்கா இராணுவ சுற்றிவளைப்பின்போது இடம் பெற்ற நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட



வீரச்சாவு:
15
-
07
-
1983



வீரவேங்கை ஆனந் — லெப். சீலன்
[அருள்நாதன் இராமநாதன்] [லூக்காஸ் சாள்ஸ் அன்ரனி]
25 - 01 - 1964 <—:பிறப்பு—> 19 - 11 - 1960

போராட்டச் செடியில் புஷ்பித்த புரட்சி மலர்கள் - நீங்கள்
எருவாகி விட்டீர்கள்! எருவாகி விட்டாலும் மலர்க்காம்பில்
போராட்ட விதைகளை உருவாக்கி விட்டீர்கள்! - ஒரு நாள்
விதை விழுந்து முளையாகிச் செடியாகும்! அப்போது
தளிர் துளிர்த்து மீண்டும் புதுமலர்கள் புஷ்பிக்கும்! - நாளை
அம்மலர்கள் அன்னை விலங்கொடிக்கும்! மலருகின்ற தமிழீழத்
தடாகத்தில் மலர்ச்சியுடன் உங்கள் முகம் தெரியும்! - இது உறுதி!!

தற்போதைய முகவரி: -
''பாக்கிய பவனம்''
கல்லூரி வீதி,
பருத்தித்துறை.

(8795)

ஆனந் குடும்பத்தினர்
''ஆனந் பண்ணை''
மயிலிட்டி,
காங்கேசன்துறை.

## பாராளுமன்றத் தேர்தல் களம்

# கட்சிகள் அணி சேர்ந்து விட்டன;

# கொள்கை என்பதைவிட வெற்றியே குறிக்கோள்

தேர்தலுக்கான நியமனப் பத்திரம் தாக்கல் செய்வதற்கான காலக்கெடு 11ஆம் திகதி நண்பகலுடன் முடிவடைந்ததுடன், சிறிலங்கா தேர்தல் களம் ஓரளவிற்குத் தெளிவான வரையறைக்குள் வந்து விட்டதெனலாம். இனி வேட்பாளராக நிற்பதற்கான வாய்ப்பு இல்லை என்றநிலையில், பெரும் கட்சித் தாவல்களும், பிளவுகளும் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் குறைவடைந்து விட்டது என்றே எதிர்பார்க்கலாம்.

இந்த வகையில், ஐக்கிய தேசியக் கட்சியுடன் சில கட்சிகளும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து பிரிந்து சென்ற பௌத்த - சிங்கள தீவிரவாத போக்குடையமுன்னாள் எம். பி.கள்சிலரும் இணைந்துள்ளனர். எதிர்த்தரப்பான சுதந்திரக் கட்சியுடன் பொது ஜன முன்னணி என்ற 'பெனரின்' கீழ் இடதுசாரிப் போக்குடைய கட்சிகளும், ஐ. தே. கவில் இருந்து முரண்பாடுகள் காரணமாக வெளியேறியவர்களும் முன்னாள் எம். பி களும் உறுப்பினர்களும் இணைந்து கொண்டுள்ளனர்.

சிறிலங்கா அரசியலைப் பொறுத்து முன் எப்பொழுதும் இல்லாத வேகத்திலும், தொகையிலும் இம்முறை கட்சித் தாவல்களும் தேர்தல் கூட்டுக்களும் இடம் பெற்றுள்ளன என்று கூறுவது மிகையானதல்ல. இதேசமயம், இத் தேர்தல் கூட்டுக்கள், உடன்பாடுகள் என்பன எந்த வித கொள்கையின் அடிப்படையிலும் இடம் பெற்றவை அல்ல என்பதும் நிதர்சனமாகும்.

இத் தேர்தல் கூட்டுக்களின் ஒரே ஒரு அடிப்படை ஐ. தே. க. வுடன் இணைந்து ஆட்சி பீடம் ஏறுதல் அல்லது ஐ. தே. க. வின் ஆட்சியைக் கவிழ்த்து ஆட்சி பீடம் ஏறுதல் என்பது மட்டுமே.

இந்நிலையில் பிரதான அரசியற் கட்சிகளைப் பொறுத்து எவரை இணைத்துக் கொண்டாலும் பரவாயில்லை, தேர்தலில் வெற்றி பெற்று விட வேண்டும் என்பதே அவர்களின் குறிக்கோளாகும். இதன் அடிப்படையில், தம்முடன் இணையக் கூடிய சிறுகட்சிகளைச் சேர்த்துக் கொள்வதே அவற்றின் நோக்கமாகவுள்ளது.

### விட்டுக் கொடுப்புடன் ஐ. தே. க.

இந்தவகையில் ஐ. தே. கட்சி தனது தேர்தல் கூட்டணியான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மக்கள் ஐக்கிய முன்னணி, லிபரல் கட்சி, பிரேமச்சந்திரா தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி என்பனவற்றுடன் மட்டும் விட்டுக் கொடுப்புக்களுடன் உடன்பாடு காணவில்லை. உதிரிகளாக ஏனைய கட்சிகளில் இருந்து வந்தவர்களுடனும் தாராள மனத்துடனேயே டி. பி. விஜேதுங்கா நடந்து கொண்டுள்ளார். கடந்த காலத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் ஐ. தே. கட்சியின் இவ் விட்டுக்கொடுப்பானது அதிகம் என்பதில் சந்தேகமில்லை.

இந்தவகையில் சுதந்திரக் கட்சியில் இருந்து வந்த அனுரா பண்டாரநாயக்காவிற்குத் தேசியப் பட்டியலில் இடம் அளிக்கத் தயாராக இருப்பதோடு, அவரைத் தொடர்ந்து வந்த திலக் கருணநாயக்காவிற்கு களுத்துறை மாவட்ட ஐ. தே. க. வேட்பாளர் பட்டியலில் முதன்மை வேட்பாளர் என்ற நிலையும் அளிக்கப்பட்டுள்ளது.

இது ஒருவகையில் கடந்த காலத்தில் எப்பொழுதும் இல்லாத அளவில் ஐ. தே. கட்சி பலவீனமான நிலையில் இருக்கின்றது என்பதைக் காட்டுவதாகவு உட்கட்சிமுரண்பாடு உச்சத்தில் இருப்பதையும் வெளிக்காட்டியுள்ளது என்றே அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றார்கள்.

### பலமான நிலையில் எதிரணி

இதேவேளை சுதந்திரக்கட்சியானது கடந்த இரு தசாப்தங்களில், இம்முறைதான் ஒப்பீட்டளவில் பலமான நிலையில் உள்ளதாக கொள்ள வேண்டியுள்ளது. சந்திரிகா குமாரணதுங்காவும், அவரது ஆதரவாளர்களும் கூறுவது போன்று, அநுரா பண்டாரநாயக்காவும் அவரது அணியினரும் வெளியேறியமை சுதந்திரக் கட்சிக்குள் இருந்த பூசல்களை ஓரளவு தீர்த்துள்ளது என்பது ஓரளவு ஏற்றுக் கொள்ளத் தக்கதாகவே உள்ளது.

ஏனெனில், இம்முறை தேர்தல் பேரத்தில் சுதந்திரக் கட்சி வலுவான நிலையில் இருந்தே பேசியுள்ளமை இதைச் சுட்டிக் காட்டக் கூடியது. இட ஒதுக்கீட்டுப் பேரத்தில் தினேஷ் குணவர்த்தனா தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணிக்கு விட்டுக் கொடுக்காமல் நடந்து கொண்டதில் இருந்தே இதை விளங்கிக் கொள்ள முடியும்.

### தேர்தல் கூட்டின் அடிப்படை

இதேசமயம், பிரதான கட்சிகளின் பலம், பலவீனம் எவ்வாறு இருப்பினும் இம்முறை சிறுபான்மையினரின் வாக்குகளுப், சிறிய கட்சிகளின் சிறிய எண்ணிக்கையுமான வாக்குகளுமே தேர்தலை தீர்மானிக்கும் என அரசியல் அவதானிகள் மட்டத்திலும் அரசியற் கட்சி வட்டாரங்களிலும் கருதப்படுவதே காரணமாகும். இந்நிலையில் ஐ தே கட்சி தனது தோல்வியைத் தவிர்த்துக் கொள்வதற்கும் சுதந்திரக் கட்சி தமது வெற்றியை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் சிறுபான்மையினரதும் சிறிய கட்சிகளினதும் உதவி அவர்களுக்கு அவசியமாகவே உள்ளது.

இருப்பினும் இடதுசாரிகள் சிறிலங்கா அரசியலில் மிகவும் பலவீனமான நிலையிலேயே உள்ளனர். கடந்த காலத் தேர்தல்கள் இதனைத் தெளிவாகவே நிரூபிக்கின்றன. அக்கட்சிகளுக்கு வளர்ச்சிப் போக்கு என்பது கண்ணுக்கெட்டாத தொலைவிலேயே உள்ளது. இந்நிலையில் இடதுசாரிகள் ஓரிரு இடத்தையாவது தனது பெயரில் தக்கவைத்துக் கொள்ள வேண்டுமானால், அவற்றிற்கு சுதந்திரக்கட்சியுடனான கூட்டு அவசியமானதொன்று என்றே கொள்ளவேண்டும். இதற்குக் கொள்கைகளோ, கோட்பாடுகளோ தடையாக அவர்கள் கருதவில்லை. கூடுதலான இடஒதுக்கீடு, தேர்தலில் வெற்றிக்கான வாய்ப்பை உறுதி செய்தல் என்பது மட்டுமே முக்கிய விடயங்களாக இருந்துள்ளன.

இந்நிலை இல்லாது போனால், திறந்த பொருளாதாரக் கொள்கையைக் கடைப் பிடிக்கப் போவதாக அறிவித்த பின்னரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இடதுசாரிக் கட்சிகள் எனக் கூறிக் கொள்பவர்கள் எவ்வாறு கூட்டு வைக்க முடியும்? அதே போன்று, தீவிர வலது சாரிப் போக்கை வெளிக்காட்ட முற்படும் டி.பி. விஜேதுங்கா தலைமையிலான ஐதே கட்சியுடன்ஒசிஅபயகுணசேகரா போன்ற இடது சாரிப் போக்குடையவர்கள் எவ்வாறு இணைந்து செயலாற்ற முடியும்?

சிறிலங்கா அரசியல் அரங்கில் இம்முறை இடம் பெற்ற கட்சித் தாவல்கள் தேர்தல் கூட்டுக்கள் என்பன வற்றிற்கு முன்னுதாரணங்கள் காட்டமுடியாது ஆயினும் தேர்தல் உடன்பாடுகள் என்பது சிறிலங்கா அரசியலுக்குப் புதிய விடயம் அல்ல. அதேபோல், உருவாக்கப்பட்ட உடன்பாடுகள். நீடித்து நிலைக்காமையினால் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களும் புதியவையல்ல.

ஐ. தே. கட்சி கடந்த காலத்தில் மேற்கொண்ட தேர்தல் கூட்டுகள் அதற்கு பெரும்பாலும் நெருக்கடியாக இருந்ததில்லை. இதற்கு தோல்விகளின் மத்தியில்கூட ஐ: தே. கட்சி சிதையாமல் ஓரளவிற்கு பலம்பொருந்தியதாக இருந்தமையே காரணமாகும். ஆனால் இம்முறை ஐ. தே. க. முன் எப்பொழுதும் இல்லாத அளவிற்குப் பலவீனமான நிலையில்உள்ளது ஆகையினால்அதன் தேர்தல் கூட்டுக்களின் எதிர்காலம் சற்றுக் கேள்விக்குரியதாக மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆயினும் ஐ. தே. கவின் பிரதான கூட்டணியான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஒரு நீண்டகால நண்பன் என்பது மறுப்பதற்கில்லை.

ஆனால், கடந்தகால அரசியல் வரலாற்றில், ஐ. தே. கட்சியை எதிர்தரப்பினர் தோற்கடித்த சகல தேர்தலிலும், ஒரு எதிர்த்தரப்புக் கூட்டணியையே சுதந்திரக்கட்சி ஏற்படுத்தி இருந்ததென்பதே உண்மையாகும். இது எதிர்த்தரப்பினரின்பலம்பொருந்திய தலைவராக விளங்கிய பண்டாரநாயக்காகாலத்தில்இருந்துஇன்று வரைபொதுவான அம்சமாகவே இருந்து வருகின்றது. ஆனால், இவ்வாறு உருவாகிய கூட்டணிகள் ஆட்சிக்கு வந்ததும். ஒற்றுமையாகச் செயற்பட்டதாகவோ, விட்டுக்கொடுத்து நடந்ததாகவோ என்றால்இல்லை. இதன்காரணமாககூட்டணி அரசுகள் இடை நடுவில் பெரும் நெருக்கடிகளை எதிர் நோக்க வேண்டியும் இருந்தது.

### கடந்த காலக் கூட்டுக்கள்

ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான முதற் கூட்டு 1956இல் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவினால் அமைக்கப்பட்டது. பண்டாரநாயக்காவின் தலைமையில் பிலிப் குணவர்தனா, என். எம். பெரேரா மற்றும் பீட்டர் கெனமன் ஆகியோரின் கட்சிகள் இணைந்து ''மகாஜன எக்ஸத் பெரமுன'' என்ற கூட்டமைப்பை உருவாக்கினர். இவ்வாறு உருவாகிய கூட்டணி 'சுதந்திரத்தின் பின்' முதல் ஆட்சிமாற்றத்தைச் செய்தது. 1956 ம் ஆண்டுத் தேர்தலில் ஐ. தே. கவை தோல்வியுறச் செய்தது. 95 ஆசனங்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் 51 ஆசனங்களைப்பெற்று ஆட்சியைக்கைப்பற்றினர்.

ஆனால் அதே ஆண்டிலேயே அக்கூட்டணி ஆட்டம் காணத் தொடங்கியது. ஜூன் 5இல் சிங்களம் மட்டும் ஆட்சி மொழி என்ற சட்டம் கொண்டு வரப்பட்டபோது இடதுசாரிகள் இதை ஆட்சேபித்தனர். இது கூட்டணிக்குள் முரண்பாடுகளைத் தோற்றுவித்தது. இம் முரண்பாடுகள் விரிவடைந்து 1960இல் இரு தேர்தல்களைச் சந்திக்க வேண்டிய நிலையை ஏற்படுத்தியது. பின்னர், 1960இல் நடந்த இரண்டாவது பொதுத் தேர்தலில் சிறிமாவோதலைமையில் இடதுசாரிகள் பதவிக்கு வந்தபோதும் ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகக் கூட்டு நீடிக்கவில்லை.

இதேபோன்றே 1970இல் மீண்டும் சுதந்திரக்கட்சியின் தலைமையிலான கூட்டணி தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிபீடம் ஏறியது ஆனால், இக்காலத்திலும் கூட்டணிக்குள் ஏற்பட்ட முரண்பாடு 1975இல் லங்கா சமசமாஜக்கட்சியும், 1976இல் கம்யூனிஸ்ட் கட்சியும் முன்னணியில் இருந்து வெளியேறின. இதைத் தொடர்ந்து பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியும் நெருக்கடிக்குள்ளானது.

இவ்வாறான கடந்த காலத் தேர்தல் கூட்டுக்கள் நெருக்கடிக்கு உள்ளாவதற்குக்காரணம்கட்சிகள் கொள்கை அடிப்படையில் இணையாமல் ஐ. தே க. எதிர்ப்பு என்றரீதியில்மட்டுமே இணைந்துள்ளமையேஆகும். இதற்கு தற்போதைய இணைவும் புற நடையானதல்ல. ஏனெனில் சுதந்திரக் கட்சி இம்முறையும் இடதுசாரிகளைபே தமது பிரதான கூட்டாளிகளாகக் கொண்டுள்ளது. இந் நிலையில்பொதுஜனமுன்னணியில்பிரதான கட்சியானசுதந்திரக்கட்சிதிறந்தபொருளாதாரக் கொள்கையை ஆதரிக்க அவர்களுடன் கூட்டுவைத்துள்ளகம்யூனிஸ்ட்கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி என்பன திறந்த பொருளாதாரக் கொள்கைலய எதிர்க்கின்றன. இவ்வாறாக முக்கிய விடயம்ஒன்றிலேயே இணக்கம் இல்லாத நிலையிலேயே எதிர்க்கட்சிக் கூட்டணி தேர்தலில் போட்டியிடுகின்றது. இக்கூட்டணியைப் பொறுத்து புதிய வரவு சிறிமானி அத்துலத்முதலி தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் ஐ. தே. கவில்இருந்து உதிரிகளாக வந்தவர்களுமே.

ஆனால் கடந்த கால எதிர்த்தரப்பு கூட்டணியை விட இம்முறை கூட்டணியானது அரசியலமைப்பு விதிக்கும் கட்டுப்பாடுகள் காரணமாக விரும்பியோ விரும்பாமலோ இலகுவில் பிரிந்து செல்ல இடமளிக்காது. அவ்வாறு பிரிந்து செல்ல முற்படின் அநேகமாக பிரிந்து செல்லும் சிறுகட்சிகளுக்குப் பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தக்கூடும்.

இம்முறை எதிர்த்தரப்புகூட்டணி, தேர்தல் தொகுதி உடன்பாடு என்றில்லாது,ஒரே வேட்பாளர் பட்டியலில், ஒரே சின்னத்தில் போட்டியிடுவது இவர்களின் கூட்டை பலப்படுத்தும் அம்சமாகவே உள்ளது. அத்தோடு விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறையும் இதற்குச் சாதகமாகவேஉள்ளது இவையாவற்றிற்கும் மேலாக, இவ் எதிரணியினர் ஆட்சியைக் கைப்பற்றுமிடத்து கடந்த 17 வருடகாலமாகஎதிர்த்தரப்பில்இருந்து சலிப்படைந்து விட்டவர்கள் மீண்டும் விரைவிலேயே எதிரணி வரிசையில் உட்கார விரும்பமாட்டார்கள் என்றே எதிர்பார்க்கலாம்.

ஜெயராஜ்

# சோழனின் மக்கள் சேவையின்

# இரண்டாம் ஆண்டின் உதயம்

எமது வாடிக்கையாளர்கள்,
அன்பாளர்கள், ஆதரவாளர்கள்
அனைவர்க்கும் எமது
நன்றிகள்,
நல்லாசிகள்!

வளரும் ஆண்டிலும்
உங்கள் தேவைகளை
பூர்த்தி செய்யக்
காத்திருக்கின்றோம்

## சோ ழ ன்

வாழ்த்தி நிற்கும்
சகோதர நிறுவனங்கள்

★ சோழன்
நெல் அரிசி வாணிபம்
பருத்தித்துறை சாலை, நெல்லியடி.

★ சோழன்
நெல் அரிசி வாணிபம்
மீசாலை

★ சோழன்
நடமாடும் விற்பனை நிலையம்
பலாலி சாலை, திருநெல்வேலி.

வாழ்த்தி நிற்கும்
சகோதர நிறுவனங்கள்

★ சோழன்
அரைக்கும் ஆலை
சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம்.

★ சோழன்
அரைக்கும் ஆலை
சங்கத்தானை

★ சோழன்
அரைக்கும் ஆலை
வதிரி

**பலாலி சாலை, திருநெல்வேலி.**

## ★ சோழன் சாக்கு கொள்வனவு நிலையம்

சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம்.

## ★ சோழன் அரிசி ஆலைகள்

(சி-9928)

# பட்டியலில் இடம் பெறாமைக்கு ஹேமாவின் தடுமாற்றமே காரணம்

(கொழும்பு)

திருமதி ஹேமா பிரேமதாசா தேர்தலுக்கு நிற்பது பற்றி தானே முடிவு செய்ய முடியாமலிருந்ததாலேயே, ஐக்கிய தேசியக் கட்சி பட்டியலில் இடம்பெற முடியாமல் போய் விட்டதென்று, ஐ. தே. க. பொதுச்செயலாளர் காமினி விஜேசேகரா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ஐ. தே. க. கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடும் படி, திருமதி பிரேமதாசாவை கேட்டுக் கொண்டது. அவர் சம்மதம் தெரிவித்து வெள்ளிக் கிழமை நியமனப் பத்திரங்களில் கைச்சாத்திட்டார். இதன் பின் அவரது பெயர் கொழும்பு வேட்பாளர் பட்டியலில் இடம் பெற்றிருந்தது.

எனினும் திங்கட்கிழமை காலை 7. 35 மணியளவில், திருமதி பிரேமதாசா தொலைபேசியில், தான் போட்டியிடவில்லை எனத் தெரிவித்தார் நியமனப் பத்திரங்களை பூர்த்தி செய்வதற்கு ஒரு நிமிடம் முன்னர்வரை ஐ. தே. க. பட்டியலில் அவர் பெயர் இருந்ததென்றும் விஜேசேகரா தெரிவித்தார்.

ஆனால் இறுதி நேரத்தில் திருமதி பிரேமதாசா கச்சேரிக்கு வந்து தான் போட்டியிட விரும்புவதாக தெரிவித்தார் அப்போது காலம், நேரம் பிந்தி விட்டது அவரது பெயருக்குப் பதிலாக ரட்ணசிறி ராஜபக்சவின் பெயரை நாம் கொடுத்து விட்டோம் அவர் கச்சேரிக்கு வந்தபோது எம்மால் ஒன்றுமே செய்ய முடியாமல் போய்விட்டது.

திருமதி பிரேமதாசா திட்டமான முடிவு எடுக்காமையினாலேயே இவ்வாறு நிகழ்ந்ததென்றும் விஜேசேகரா மேலும் தெரிவித்துள்ளார்.


## விசேட முக்கிய அறிவித்தல்

யாழ். வணிகர் கழகம், நல்லூர் வணிகர் கழகம்,
யாழ். வணிக ஊழியர் கழகம், யாழ். நகைத்
தொழிலாளர் சங்கம், யாழ். பொதிசுமக்கும்
தொழிலாளர் சங்கம் இணைந்து விடுக்கும்

### முக்கிய அறிவித்தல்

யாழ். வணிகப் பெருமக்களையும், நல்லூர் வணிகப் பெருமக்களையும். யாழ். வணிக ஊழியர்களையும், நல்லூர் வணிக ஊழியர்களையும், யாழ். நகைத் தொழிலாளர்களையும், யாழ். பொதி சுமக்கும் தொழிலாளர்களையும் 15 - 07 - 94 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2. 30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் விசேட பொதுக் கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

வர்த்தக நிலைய உரிமையாளர்கள், பணிப்பாளர்கள் அனைவரும் இக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளவேண்டி இருப்பதால் வர்த்தக நிலையங்களை பிற்பகல் 2. 00 மணியுடன் பூட்டி இக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி

அனைத்து சங்கங்களின்
- நிர்வாகத்தினர்


(சி-9931)



## நான்காம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு:
07 - 06 - 1969

வீரச்சாவு:
15 - 07 - 1989



### இரகர் சிவா -சின்ன நஜீர்
### இரகுநாதன் ( கார்த்திகேயன் ) சிவபரன்

( யாழ்ப்பாணம் - நாயன்மார்கட்டு )

செல்வச் சிவாவே நீ சாகவில்லையடா! நாம் நினைத்த வேளையெல்லாம் - நீ கண்முன்னால் நிற்கின்றாய் மறவோம்ஐயா,

தமிழீழம் காணாது போனாயோ - பொன்மகனே!
சாவுக்கும் அஞ்சாமல் சாதனைகள் பல படைத்தாய்
காவற்கடவுளெனக் காத்தாய் தமிழீழம்
சின்ன நசீராய் தீரன் இரகர் சிவாவாய்
மன்னியவா தமிழீழ மன்னவர் தம் நெஞ்செல்லாம்.
நாயன்மார் கட்டன்றி நாடே நயந்தவனே!
வாயில் சமாதானம். மனத்தில் புலியழிப்புக் கொண்டு
வந்த அந்நியரைக்குலை நடுங்க வைத்தவனே!
குண்டணைத்துக்கொண்டுனது குழுகாக்க சிதைந்தவனே
சிவபரனே! உன் நினைவு தேசத்தின் விடுதலைக்கு
- எவரைத்தான் ஊக்கவில்லை?
இறுதி வெற்றி தமிழீழ இலட்சியத்துக்கேதான் பார்!
ஏற்பாயுன் காலடியில் மலர்ச்சி கொண்ட
பூக்கள் மலை.

''புதல்வரைப் பெறுவது ஓர் அற்புதச் செயலையேனும் நாம்கண்டுஇன்புறுவதற்கேயாம். தன் அருமை மகன் போரில் மடிதல் நாட்டின் மேம்பாடு கருதியேயன்றித் தன்னலம் கருதியது ஆகாது, ஆதலால், அச்செயலிலும் சிறந்த தருமமும், தியாகமும், கர்மமும், வேறில்லை. இவ்வழியில் தேசவிடுதலைக்காகத் துணிவு மிக்க வீர உணர்ச்சியோடு உன்பங்களிப்பைச் செய்து எமக்கும் புகழ் தேடித்தந்த உத்தமனே இன்று உமது வீரத்துக்குத் தலை வணங்குகின்றோம்''.

என்றும் நினைவில் நீங்காத
தந்தை, தாயார், சகோதர, சகோதரிகள், மைத்துனர், மருமக்கள்.

54- சிவரஞ்சினி வீதி,
நாயன்மார்கட்டு.

(சி-9928)


# எதிரணி தேசியப்பட்டியல்; இடம்பெறுவோர் விபரம்

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணி சார்பில் தேசியப் பட்டியலில் பின்வருவோர் இடம் பெறுகின்றனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறிமா பண்டாரநாயக்கா, தர்மசிறி சேனநாயக்கா, கே. பி. இரத்னாயக்கா, மைத்திரிபால சேனநாயக்கா, கலாநிதி ஜீ. எல் பீரிஸ், எம். அலவி மௌலானா, லக்ஸ்மன் கதிர்காமர், கே .பி சில்வா, ரி. ஆர். என். அசீஸ், கே.பி.வீரக்கோன், காமினி பொன்சேகா, வை. பி. டி. சில்வா, பொடி அப்புஹாமி, காலிங்க ஒபேவன்ச ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

# அமைச்சர் அலுவிகார சுயேட்சைக் குழுவில் போட்டி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அமைச்சர் அலிக் அலுவிகார மாத்தளை மாவட்டத்தில் சுயேட்சைக் குழுவொன்றின் சார்பில் போட்டியிடுகிறார். மாத்தளை விசேட ஆணையாளர் யசபந்து அமரவீர தலைமையிலான குழுவிலேயே இவர் போட்டியிடுகின்றார்.

இவரின் இம் முடிவினால் ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்குகள் பிரிவடையும் நிலை உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## உதவு தொகை கொடுப்பனவு

1994 ஜூலை முதலாம் திகதி முதல் கல்வி அபிவிருத்திக்கழக ஆசிரியர்களுக்கான உதவு தொகைக் கொடுப்பனவுகள் யாவும் தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் வழங்கப்படும். கடமையாற்றிய மாதத்திற்கான உதவு தொகையை, ஆசிரியர்கள் அடுத்த மாதம் 5 ஆம் திகதிக்குப்பின்னர் தத்தமது கோட்டக் கல்விப்பணிமனைகளில், அதற்குரிய, அதிபரினால் உறுதி செய்யப்பட்ட படிவங்களை ஒப்படைத்துப் பெற்றுக்கொள்ளலாமென அறிவிக்கப்படுகிறது.

## வயல் விழாவும் கலந்துரையாடலும்

திருநெல்வேலியில் அமைந்துள்ள விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 முதல் பிற்பகல் 12-15 வரை ''வயல் ழாவும் விவசாய ஆராய்ச்சிக் கலந்துரையாடலும்'' நடைபெறவுள்ளது. இவ் விழாவில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளும் விவசாய வலுநர்களும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் விவசாயத் துறையினரும் சலந்து கொள்வர்

# பிரதமர் ரணிலை சந்திக்க பிரேமாவின் மகளுக்கு தடை

(கொழும்பு)

கொழும்பு கச்சேரியில், நியமனத் தாக்கல் செய்ய ஐக்கிய தேசியக் கட்சியின் முதன்மை வேட்பாளர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா வந்திருந்த போது, அவரைச் சந்திக்க முயன்ற முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் மகள் துலாஞ்சலி ஜெயக்கொடி பிரதமரின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் தடுக்கப்பட்டதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரதமர், அலுவலக மேல் மாடியில் இருந்தபோதும், அலுவல்களின் நிமிர்த்தமும், பாதுகாப்பின் நிமிர்த்தமும் துலாஞ்சலி ஜெயக்கொடி பிரதமரை சந்திக்க அனுமதிக்கப்படவில்லை. சிறிது நேரத்தில் ஹேமா பிரேமதாசாவும் சஜீத் பிரேமதாசாவும் அங்கு வந்து சேர்ந்தனர்.

ஹேமா பிரேமதாசா மாத்திரம், பாதுகாப்பு ஊழியர்களால் அனுமதிக்கப்பட்டு பிரதமரை சந்திக்க அழைக்கப்பட்டார்.

ஹேமா, பிரதமரை சந்தித்த பின்னர் அவரும், அவருடன் வந்தவர்களும் கச்சேரியை விட்டு வெளியேறினர்.

## பொதுக் கூட்டம்

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் பொதுக் கூட்டம் நாளை சனிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு கோண்டாவில் மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. இதில் யாழ். மாவட்டத்தில் உள்ள சகல தாச்சி விளையாடும் கழகங்களின் பிரதிநிதிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு கேட்டுக்கொள்கின்றது.

## மினிபஸ் விபத்து

யாழ். நகர முட்டாஸ் கடைச் சந்தியில் நேற்று முன் தினம் இரண்டு மினி பஸ்கள் மோதிக் கொண்டன. அதில் ஒன்றிற்கு முன் பக்க கண்ணாடி முற்றாக சேதமடைந்தது. இரண்டு மினி பஸ்களிற்கும் சுமாரான சேதங்கள் ஏற்பட்டிருந்தன. அதன் பயணிகள் எவரிற்கும் காயம் ஏற்படவில்லை. (88)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

### 1994- 07- 15
### வெள்ளி இரவு

08. 01 - லெப்ரினன்ட் சீலன், ஆனந் ஆகியோர் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''உங்கள் சுவடுகளில்''
08. 20- தாயகப் பாடல்கள்
08. 30- செய்திகள்
08. 40- அரசியல் அரங்கம்
08. 50- வாத்திய கானங்கள்.

### 1994- 07- 16
### சனி காலை

07. 02- மாவீர வணக்கம்
07. 15-நீங்கள்கேட்டவை
07. 30- செய்திகள்
07. 35- பத்திரிகைச் செய்திகள்
07. 40- நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

# எமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை கூறுவோம்

## ஹேமா பிரேமதாசா தெரிவிப்பு

(கொழும்பு)

எனது குடும்பம் பொறுமையுடன் இருந்த காலம் முடிந்து விட்டது. எனக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை பொதுமக்களுக்கு எடுத்துக் கூறுவேன் என, முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் மனைவியான ஹேமா பிரேமதாசா கொழும்பு தமிழ் தினசரி ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், திங்களன்று காலை கொழும்பு கச்சேரிக்கு சென்ற நான் வேட்பாளர் பட்டியலில் எனது பெயரைச் சேர்க்குமாறு பிரதமர் ரணிலை கோரினேன். அப்போது கால அவகாசம் முடிந்துவிட்டதாக அவர் கூறினார்.

ஆனால், தெரிவு அத்தாட்சி அதிகாரியோ, திருத்தம் செய்வதற்கு இன்னும் கால அவகாசம் முடியவில்லை என்றார்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஐ. தே. கவுக்கு ஆதரவாக பிரசாரம் செய்வீர்களா என்று கேட்ட போது, உங்களுக்கு இவ்விதம் அநீதி நடந்திருந்தால் நீங்கள் கட்சிக்காக பிரசாரம் செய்வீர்களா என திருப்பிக் கேட்டார் ஹேமா பிரேமதாசா.

## சிறுவர் நாடக விழா

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டம் நடத்தும் சிறுவர் நாடக விழா இன்று பிற்பகல் 2.00 மணிக்கு மானிப்பாய் மகளிர் கல்லூரியில் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும்.

# அவசரகால சட்டத்தை டி. பி. பிரகடனப்படுத்தலாம்

அவசரகால சட்டம் காலாவதியானாலும் ஜனாதிபதியின் விசேட அதிகாரத்திற்கு அமைய அவசர நிலைமை ஒன்றை பிரகடனப்படுத்தி அதற்கு ஒத்த சட்டத்தைப் பயன்படுத்த முடியும் என சட்டமா அதிபர் திணைக்கள உயர் அதிகாரியொருவர் 'லங்கா தீப' பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தனது அதிகாரத்திற்கு அமைய சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு ஏற்ப இதனை நடைமுறைப்படுத்தலாம் என்றும் இதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் தேவைப்படாது என்றும் அவ் அதிகாரி சுட்டிகாட்டியுள்ளார்.

நல்லூர் நினைவுநூலகம்.

## லெப்.சீலன், வீ. வே. ஆனந் 11-வது வீரவணக்க கூட்டம்

லெப்டினன்ட் சீலன், வீரவேங்கை ஆனந் ஆகியோரின் 11-ம் ஆண்டு நினைவு வீரவணக்கக் கூட்டம் இன்று இரவு 7.30 மணிக்கு வெள்ளாம்போக்கட்டி சீலன், ஆனந் நினைவுப்பூங்கா அல்லாரை மீசாலையில நடைபெறும்.

எதிரியிடம் தாமும் தமது கை ஆயுதமும் சிக்கிவிடக் கூடாது என்பதற்காக தமது சக போராளியிடம் தம்மைச் சுடுமாறு பணித்து வீரச்சாவடைந்த லெப்டினன்ட் சீலன், வீரவேங்கை ஆனந் ஆகியோரின் நினைவு வீரவணக்கக் கூட்டத்தில் கருத்துரைகள் கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறவுள்ளன.

## மன்னாருக்குச் செல்ல கடற்படை உதவி தேவை

### வேட்பாளர்கள் கோரிக்கை

(வவுனியா)

மன்னாருக்கு பிரசாரத்திற்கு செல்ல கடற்படையின் பாதுகாபபு வேண்டுமென வன்னி தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் கோரியுள்ளனர்.

வவுனியாவில் இடம்பெற்ற வேட்பாளர்களுக்கான கூட்டத்திலேயே இவ்வாறு கோரப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில், ஆயுதங்களுடன் நடமாடுபவர்கள் செல்லாதவாறு தேர்தல் நடாத்தப்பட வேண்டுமென, தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரதிநிதிகள் கேட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

### கொழும்பில்

கள் என சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் உள்ள விடுதிகள் பலவும் சோதனையிடப்பட்டு சந்தேகத்தின் பேரில் பலர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் அவ்அதிகாரி மேலும் தெரிவித்தார்.

### புலிகள்

நிரந்தரமாக இணைப்பதையோ, அவற்றை ஒரே நிர்வாக அலகாக கருதுவதையோ நாம் ஏற்கவில்லை.

அரச காணி உடைமை, காணிக்கொள்கை, நாட்டின் பாதுகாப்பு, சட்டம் ஒழுங்கு பேணுதல், சகல துறைமுகங்கள், விமான நிலையங்கள் என்பன மத்திய அரசின் கீழே இடம்பெறவேண்டும் என்பதை நானும், எனது கட்சியும் கொள்கையாக கொண்டுள்ளோம்

இத் தீர்வினை நிறைவேற்ற எம்முடன் தமிழ்க் கட்சிகள் சில ஒத்துழைத்து வருகின்றன. ஏனையவற்றின் ஒத்துழைப்பும் பெறப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

## விபத்தில் வயோதிபர் பலி

(யாழ்ப்பாணம்)

கொட்டடியில் நேற்று முன்தினம் நடந்த மோட்டார் சைக்கிள் விபத்தில் வயோதிபர் மரணமானார்.

மேற்படி விபத்தில் மரணமானவர் அல்லைப்பிட்டி 2-ம் வட்டாரத்தைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை இராசையா (வயது 65) என்பவராவார். இவர் தற்போது இடம்பெயர்ந்து கொட்டடியில் உறவினர்களுடன் வசித்துவந்தார். (88)

### குறுக்கு

குறிப்பிட்டுள்ளார். மட்டக்களப்பில் நடைபெற்ற தேர்தல் பிரசாரத்திற்காக மட்டும் வடக்கு - கிழக்கு ஓர் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என கூட்டணி தலைவர்களில் ஒருவரான நீலன் திருச்செல்வம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# பூநகரி மோதலில் 3 போராளிகள் வீரச்சாவு



கப்டன் தமிழரசன் (நியாஸ்)



லெப். கோபால் (உலகன்)



2-ம் லெப். சிவன் (செந்தில்)

பூநகரிப் பகுதியில் விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா ராணுவத்தினருக்கும் இடையே கடந்த 11-ம் திகதி இடம்பெற்ற மோதலில் மூன்று போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்த கப்டன் தமிழரசன்/நியாஸ் (இராசையா ஜெயகரன், தாவடி தெற்கு, கொக்குவில்), லெப்டினன்ட் கோபால்/உலகன் (மாணிக்கப்பிள்ளை,பன்னீர்ச்செல்வன் கூளாவடி, ஆனைக்கோட்டை, மானிப்பாய்), 2-ம்லெப்டினன்ட் சிவன்/செந்தில்நாதன் (அண்ணாமலை கமலேஸ்வரன் கொக்குவில், தற்போதைய முகவரி இல. 14, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்) ஆகிய மூன்று போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## பாக். இராணுவத் தளபதி கொழும்பு விஜயம்

[கொழும்பு]

பாகிஸ்தான் ஆயுதப் படைத் தளபதி ஹாமின் ஆலம் கான் தலைமையிலான தூதுக்குழு கொழும்புக்கு விஜயம் செய்துள்ளது.

இவர் பாகிஸ்தான் ஆயுதப் படைகளின் அதியுயர் தளபதி யாவார். இவரது கொழும்பு விஜயம் நல்லெண்ண நோக்குடையது எனக் கூறப்படுகின்றது. எனினும் படை அதிகாரி ஒருவர் தலைமையில் இவ்வாறு தூதுக்குழு வருவது எதற்கென தகவல் வெளியிடப்படவில்லை.

### ஈ.பி.ஆர்.எல்.எவ்

ராணுவத்தோடு செயற்பட்டு வரும் ஈ.பி.டி.பி. கூறியிருப்பதாக ஈ.பி.ஆர்.எல்.எவ். தெரிவித்துள்ளது

ஆனால் அவ்வாறான கட்டளை எதுவும் தாங்கள் தீவுப் பகுதி மக்களுக்கு இடவில்லை என ஈ.பி.டி.பி. மறுத்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

ஈ.பி.டி.பியை நிராயுதபாணியாக்க வேண்டுமெனவும் ஈ.பி.ஆர்.எல்.எவ். கோரியுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### புனரமைப்பு

தெரிவிக்கப்பட்டது.

தற்சமயம் யாழ் நகர்ப்பகுதியில் இயங்கிக்கொண்டிருக்கும் யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதியும், சுபாஸ் ஹோட்டலில் இயங்கி வந்த வேலணை ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவுகளும் பழைய இடங்களுக்கு இரண்டொரு தினங்களில் மாற்றப்படவுள்ளதாக யாழ் அரச அதிபர் தெரிவித்தார்.

(பா, க, தி, நி)

## ஆலயம் சேதம்

நேற்று முன்தினம் காலை தொண்டமானாறு பகுதியில் உலங்குவானூர்தி ஒன்று நடாத்திய தாக்குதலில் செல்வச்சந்நிதி ஆலயம் சேதமடைந்தது.

### தேர்தல்

இதில் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் ஐக்கிய தேசியக் கட்சியினர் என அவர் மேலும் தெரிவித்தார்.

### வால் நட்சத்திரம்

கழக பௌதிகவியற்துறையைச் சேர்ந்த கலாநிதி சந்தன ஜெயரட்ண கூறுகிறார். இதனை தொலைநோக்கி மூலம் இலகுவாக காணமுடியும். இம்மோதல் வியாழனின் இருண்ட பகுதியில் நிகழ்வதால் ஏற்படும் பிரகாசமான ஒளி வியாழன் கோளைச் சுற்றியுள்ள சந்திரன்களில் பட்டு தெறித்தபின்னர் அதனைப் புவியிலிருந்து பார்க்க முடியும் என அறிவிக்கப்படுகிறது.

## மரண அறிவித்தல்

### மாணிக்கம் சின்னத்துரை

மாணிக்கம் சின்னத்துரை 13 07.94-ல் காலமாகிவிட்டார். இவர் காலம்சென்ற கிருபாமூர்த்தி செல்வராசா (மாவீரர் மேஜர் அன்பு), தங்கராசா (பிரான்ஸ்), திருமதி மல்லிகாதேவி மதுரலிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும் வசந்தகுமாரி, நிரஞ்சன், சந்துரு, சுதாகினி, பார்த்திபன் ஆகியோரின் பேரனுமாவார். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்

பழைய முகவரி:- பிரதான வீதி, காங்கேசன்துறை

புதிய முகவரி!- ஐயனார் வீதி, பருத்தித்துறை.

(8820)

யாழ். ஸ்ரீதரில்

தினசரி 4-00 மணி

உயிராயுதம்

தினசரி 6-00 மணி

சனி, ஞாயிறு 10-30

6.00 மணி

JURASSIC PARK

(சி-9786)

ஜோ. எகட்டனின்

ஜெசித்தாரா வழங்கும்

திருவிழாக்கால, சுத்தபோசன உணவுப் பொட்டலங்கள், தயிர், மோர், அப்பளம் மற்றும் பக்த கோடிகள் விரும்பும் தித்திப்பான சுத்தபோசனஉணவுப் பொட்டலங்கள், வெள்ளி, செவ்வாய். மற்றும் விரத தினங்களில் விசேஷமாக தனியாக தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றன. விரையுங்கள்.

ஜெசித்தாரா,

[சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை சுண்டுக்குளி.]

(சி-9918)

புகைப்படக் கலைஞர்களுக்கோர் வாய்ப்பு! ஓர் சந்தர்ப்பம்!!

தமிழீழ விடுதலைப் புலிகளின்

புகைப்படப் பிரிவினரால் நடாத்தப்படும்

புகைப்படப் போட்டி

உங்கள் கலைக்கொணர்விற்கும், திறமைக்குமான

15- 07 - 94 தொடக்கம்

15 - 10 - 94 வரை

முதற்பரிசு: தங்கப் பதக்கமும் பணமும்

இரண்டாம் பரிசு: வெள்ளிப் ,, ,,

மூன்றாம் பரிசு: வெண்கலப் ,, ,,

விபரங்களுக்கு நாளைய ஈழநாதம் பத்திரிகையைப் படியுங்கள் (சி-9930)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜூலை மாதம்15ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது